Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY — தேசிய தினசரி

போன்: 389 — தபாற் பெட்டி எண்: 49

யாழ்ப்பாணம் பிலவ ஆனி 8 ஆம் நாள் முஹர்ரம் 8 (22-6-61) வியாழக்கிழமை இதழ் 110

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
பெங்களூர்–2.

# தமிழ் சர்வகலாசாலை

## திருக்கோணமலையில் கட்டட வேலை ஆரம்பம்

### முதல் தடை நீங்கிவிட்டது

கொழும்பு, புதன்

**திருக்கோணமலையில் உத்தேச தமிழ் சர்வகலாசாலையை நிர்ணயிக்கும் இயக்கம் வெற்றி பெற, மாற்றுவழியொன்றுகாணப்பட்டிருக்குகிறது**

தமிழ் சர்வகலாசாலை இயக்கம் சங்கச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படவில்லையாதலால் அது சட்டரீதியானதல்ல. எனவே கட்டிட வேலைகளுக்காக அது எவருடனும் ஒப்பந்தம் செய்து கொள்ள முடியாது.

இதற்கிடையில், இயக்கம் டெண்டர்களைக் கோரி அவற்றைத் தெரிவு செய்தும் இருக்கிறது. இதற்கு ஒரே மாற்றுவழி, இயக்கத்தின் சார்பாக நிர்வாகசபை அங்கத்தினர்களில் எவராவது ஒருவர் தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்று ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். இப்போது தமிழ் சர்வகலாசாலை இயக்க நிர்வாகசபையின் சகல அங்கத்தினர்களுமே இப்பொறுப்பைத் தனிப்பட்ட முறையில் ஏற்று ஒப்பந்தம் செய்து கொள்ள முன்வந்திருக்கிறார்களாதலால் திருக்கோணமலையில் கட்டிட வேலைகளை ஆரம்பிப்பது எளிதாகியிருக்கிறது.

## ஜூலை 26ல் பட்ஜட் சமர்ப்பணம்

கொழும்பு, புதன்

வருகிற ஜூலை மாதம் 26-ம் தேதி பார்லிமெண்டில் பட்ஜட் சமர்ப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இப்போதைய ஏற்பாடுகளின் படி, ஜூலை 27-ம் தேதி இரண்டாம் தடவையாக அது விவாதிக்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

## பிரிட்டிஷ் பிரதம நீதியரசர் இலங்கை வருகிறார்

கொழும்பு, புதன்

இங்கிலாந்தின் பிரதம நீதிபதி பார்க்கர் பிரபுவும், அவரது மனைவியும் வருகிற சனிக்கிழமை இலங்கை வருகிறார்கள். பிரதம நீதியரசர் திரு. ஹேமா பஸநாயக்காவின் அழைப்பின் பேரில் வரும் அவர்கள், 24-ந் திகதி முதல் 28-ந் திகதி வரை இங்கு சுற்றுப்பிரயாணம் செய்வார்கள். கண்டி தலதா மாளிகை, பேராதனை பல்கலைக் கழகம், பொலன்னறுவை உட்பட பல இடங்களுக்கு அவர்கள் செல்வார்கள்.

## இலங்கை என்ஜினியரிங் கார்ப்பரேஷன் வேண்டும்

### அரசாங்கத்துக்கு மந்திரி திரு. மைத்ரிபால யோசனை

கொழும்பு, புதன்

அரசாங்கக் கட்டிடங்களுக்கான மாதிரி அமைப்புக்கள் பற்றி என்ஜினியர்கள், சிவில் என்ஜினியரிங் ஸ்தாபனங்கள் ஆகியோரிடம் ஆலோசனை பெறுவதற்காக லட்சக்கணக்கான ரூபாய் செலவாகுவதாயும், இதைத் தவிர்க்கும் பொருட்டு என்ஜினியர்கள், சிற்பிகள், அமைப்பாளர்கள் ஆகியோரைக்கொண்ட இலங்கையர் கார்ப்பரேஷன் ஒன்றை அமைக்கவேண்டுமென்றும் கைத்தொழில் மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா அரசாங்கத்துக்குத் தெரிவித்துள்ளார்.

தன் சொந்த அமைச்சில் இவ்வித வேலைகளுக்காக வெளிநாட்டுஸ்தாபனங்களிடம் ஏராளமான பணம்கொடுக்கப்படுவதே வழக்கமாய் இருக்கிறதென்றும் அவர் தெரிவித்தார். சிமிந்தி கார்ப்பரேஷன்களுக்கு மாதிரி அமைப்புக்கு மட்டும் வெளிநாட்டு என்ஜினியர்களுக்கு 10 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## காந்திஜியின் நண்பர் காலமானர்

சென்னை, ஜூன் 21

தென்னாபிரிக்காவில் மகாத்மாகாந்தியின் நண்பராய் இருநதவரும், நேட்டால் இந்தியக் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவருமான திரு. ஆர். டி. ஷெட்டி காலமானர் என அறிவிக்கப்படுகிறது. வர்த்தகத்துறையில் பிரபல்யம் வாய்ந்த இவர் தமிழ்நாட்டில் பொறையாறு என்ற ஊரைச் சேர்ந்தவர். அவருக்கு வயது 87.

## கைவண்டிக்காரருக்கு அன்பளிப்பு

சென்னை, ஜூன் 21

சென்னையிலுள்ளகைவண்டிக்காரர்கள் ஒவ்வொருவருக்கும் இலவசமாக ஒரு ஜோடி தரமான செருப்புக்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

## நிபுணர்கள் சிபார்சுக்கு முன் எதுவும் செய்ய வேண்டாம்

### உருக்கு ஆலை பற்றி அரசாங்கத்துக்கு நிதிமந்திரி கோரிக்கை

கொழும்பு, புதன்

சோவியத் தொழில்நுட்ப, கடன் உதவியுடன் இலங்கையில் நிறுவப்படவிருக்கும் உத்தேச இரும்பு, உருக்கு தொழிற்சாலை பற்றி மந்திரிசபைக் கமிட்டி, இந்திய நிபுணர்கள் ஆகியோர் சிபார்சுகள் செய்வதற்கு முன் எவ்வித ஏற்பாடுகளும் செய்யவேண்டாமென நிதி மந்திரி அரசாங்கத்தைக்கேட்டிருக்கிறார்.

## ஆஸ்பத்திரி சுவீப் வருமானம்

கொழும்பு, புதன்

ஆஸ்பத்திரி சுவீப்பிலிருந்து கிடைக்கும் பணத்தை ஆஸ்பத்திரி, ஆயுர்வேதம் ஆகியவை நீங்கலாக சமூக நலனுக்கும் உபயோகிக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

## ஷோம்பே விடுதலையாவார்?

லியப்போல்ட்வில், ஜூன் 21

கடாங்கா ஜனாதிபதி ஷோம்பேயுடன் கைதான 11 பேர் விடுதலைசெய்யப்பட்டு விட்டதாயும், ஷோம்பேயும், அவரது வெளிநாட்டுமந்திரி திரு கிம்பாவும் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் ஒரு செய்தி கூறுகிறது.

## அக்கௌண்டன்ட்கள் தொழில் நுட்ப அதிகாரிகளா?

### 29 பேரின் தலைவிதி இவ்வாரம் தெரியவரும்

கொழும்பு, புதன்

தொழில் நுட்ப அதிகாரிகளாக அக்கௌண்டன்ட்களைக் கருதலாமா என அரசாங்கம் இவ்வாரத்தில் பரிசீலிக்கவிருக்கிறது. அரசாங்கசேவையிலுள்ள 23 அக்கௌண்ட்ன்ட்கள், ஆடிட் இலாகாவிலுள்ள 6 சுப்ரீண்டன்ட்கள் ஆகியோரின் தலைவிதி இந்தப்பரிசீலனையில்தான் தங்கியிருக்கிறது.

## தெ. கொரியாவில் 15 நீதிபதிகள் ராஜிநாமா

ஸியோல், ஜூன் 21

தென்கொரியாவில் 11 உயர்தர நீதிபதிகள் உட்பட 15 நீதிபதிகள் ராஜினாமாச்செய்திருப்பதாய் ராணுவ அரசாங்கம் அறிவித்துள்ளது.

## செனட்டில் நெற்காணி மசோதா நிறைவேறியது

கொழும்பு, புதன்

நேற்று செனட்டில் ஒன்றரை மணி நேரத்தில் நெற் காணி மசோதா நிறைவேற்றப்பட்டது.

## பௌத்த காங்கிரஸில் கலந்துகொள்ள பிரதமருக்கு அழைப்பு

கொழும்பு, புதன்

பாட்னாவில் வரும் நவம்பரில் நடைபெற இருக்கும் ஏழாவது பௌத்த கவுன்ஸிலில் கலந்துகொள்ளுமாறு பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அழைக்கப்பட்டிருக்கிறார்.

இக்கவுன்ஸிலுக்குத் தலைமை தாங்க இந்திய ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத் அழைக்கப்பட்டுள்ளார்.

பல பௌத்த நாடுகளிலிருந்தும் பௌத்த குருமார்கள் இவ்வைபவத்தில் பங்கு கொள்வார்களெனத் தெரிகிறது.

## ரூ. 15,000 பெறுமதியான 650 மூடை வெங்காயம்

### காங்கேசன்துறையில் கைப்பற்றப்பட்டது

மாவிட்டபுரம், புதன்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 2 பிரபல வர்த்தகர்கள் தென்னிந்தியாவிலிருந்து 2 பாய்க் கப்பல்கள் மூலம் ரூ. 15,000 பெறுமதியான 650 மூடை வெங்காயத்தை சட்டவிரோதமாய் காங்கேசன்துறையில் இறக்குமதி செய்ததாய்க் கருதி, காங்கேசன்துறை சுங்க இலாகா உதவி கலெக்டர் திரு. எஸ். இராசநாயகம் அவற்றைப் பறிமுதல் செய்தார் என அறிவிக்கப்பகிறது.

## துருக்கி தூதுவர்

கொழும்பு, புதன்

புதிதாக இலங்கை வந்துள்ள துருக்கி தூதுவர், இன்று தன் நியமனப் பத்திரங்களை கவர்னர் ஜெனரலிடம் சமர்ப்பித்தார். நேற்று அவர் பிரதமரைச் சந்தித்துப் பேசினர்.

## மொறட்டுவையில் சிற்பவேலைப் பயிற்சி திட்டம்

கொழும்பு, புதன்

அடுத்த மாதம் முற்பகுதியில் மொறட்டுவையில் சிற்பவேலைப் பயிற்சித் திட்டம் ஒன்றை அரசாங்கம் ஆரம்பிக்கும்.

## கனடா நாணய மதிப்பை குறைக்கும்

ஒட்டாவா ஜூன் 21

கனடா தன் நாணய மதிப்பைக் குறைக்கவிருக்கிறது. இந்தத் தகவலை அந்நாட்டுப் பிரதமர் பார்லிமெண்டில் அறிவித்தார்.

## ஆபாச பிரசுரங்களை வாங்க புத்தகத்தை விற்கும் சிறுவர்கள்

### பௌத்த காங்கிரஸ் காரியதரிசி வருத்தம்

கொழும்பு, புதன்

"ஆபாசப் பிரசுரங்களை வாங்கும் பொருட்டு பாடசாலைப் பிள்ளைகள், தங்கள் பாடப் புத்தகங்களைவிற்கிறார்கள். இதனால் இளம்சந்ததியினரிடையே நேர்மையின்மையும், ஒழுங்கீனமும் வளர்ந்து வருகிறது" என அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் கூட்டுக் காரியதரிசியான திரு. எச். ஸி. கல்தேரா கூறினார்.

"சில தினங்களுக்கு முன்பு 12 வயதான ஒரு சிறுவன் ஆபாசமும், வார்த்தைகளால் விவரிக்கமுடியாத வருணனைகளும் கொண்ட ஆண் - பெண்ணுறவு சம்பந்தமான ஒரு பிரசுரத்தை நூதனப் பொருட்காட்சிப் படிகளில் தவற விட்டுவிட்டான். நான் அவனிடம் இதுபற்றிக் கேட்டதற்கு தனது க்ஷேத்திர கணிதப் புத்தகத்தை விற்று அதை வாங்கியதாய்க் கூறினன். பௌத்த காங்கிரசும் பௌத்த ஆலோசனைக்கமிட்டியும் ஆபாசப் பிரசுரங்களைத் தடை செய்யுமாறு கடந்த 5 வருடங்களாக வற்புறுத்தி வருகின்றன" என்றும் அவர் கூறினர்.

## வரிவிளம்பர விகிதங்கள்

ஜனனம், திருமணம், மரண அறிவித்தல், வீடு வளவு விற்பனவு, தேவை மற்றும் வாங்கவோ, விற்கவோ இது போன்ற சகல அறிவித்தல்களும் 'ஈழநாடு' பத்திரிகையில் வரிவிளம்பரம் செய்ய ஏற்றுக்கொள்ளப்படும்.

முதல் 20 வார்த்தைகளுக்கு ரூ.3-00. மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் மேலதிகமாக 10 சதம் அறவிடப்படும்.

### மலிவு விற்பனை

ஹில்மன் ஈ.எல். 5000 இலக்க வரிசையுள்ள கார் நல்ல நிலைமையிலுண்டு. விலை ரூ. 3500. டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

1. பலவிதமான கோல்ட்பெயின்ற் நைலோன் சாறிகள் வ. வி. 42-50 இப்போ 26-50. டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

2. உடல் முழுவதும் வெள்வெற் அச்சடியன் நைலோன் சாறிகள் வ. வி. 45-00 இப்போ 25-00. டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

3. பல வர்ணந்தீட்டிய நைலோன் சேலைகள் வ. வி. 47-50 இப்போ 27-50. டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

4. பலவிதமான ஸ்கேட் போடருள்ள வெல்வெற் புளக் நைலோன் சாறிகள் வ. வி 47-75 இப்போ 27-50. டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

5. உடல் முழுதும் கோல்ட் பெயின்ற் கொடி டிசைன்களில் நைலோன் சேலைகள் வ. வி. 37-50 இப்போ 24-50. டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

6. டியூடொறப்ஸ் டிசைன்களில் நைலோன் சாறிகள் வ. வி. 55-00 இப்போ 29-50. டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

7. பூவேலைப்பாடுள்ள டக்கா பட்டுச்சேலைகள். 7 சேலைகள் மாத்திரம் வ.வி. 75-00 இப்போ 37-50. டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

8. கட்டங்களிட்ட ஆட் காஞ்சிபுரம் சேலைகள் நிபன் போடரும் குஞ்சமுமுடையது. சொற்ப சேலைகளே இருக்கின்றன. 11-75 மாத்திரம். டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

9. 2-ம்நிர் ரககோடம்பாக்கம் சேலைகள் 6 சேலைகளே உண்டு. 17-50 மாத்திரம். டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனாம்.

**வைத்தியர் பரிபூரணானந்தர்,** கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### ஆயுள்வேத அரிய மருந்துகள்

புற்றுநோயை (Cancer) வேரறுக்குமென செயல்மூலம் நிரூபிக்கப்பட்ட மருந்து "யோகீஸ்வர ரசம்." தாய்க்குலத்தாருடைய பெரும்பாடு—வெள்ளை இறைத்தல் முதலியன எட்டு நேரத்துடன் குணமடையச் செய்யும் மருந்து "பெரும்பாடு நிவாரணி." தாமதமின்றிக் கலந்தாலோசியுங்கள்.

**பொ. செல்லையா** "புற்றுநோய் நிபுணர்", ஆயுள்வேத வைத்தியர், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

### றப்பர் ஸ்டாம்புகள்

றப்பர் ஸ்டாம்பு வேலைகள் மிகத்திறமான முறையில் ஒரு நாள் தவணையில் செய்து கொடுக்கப்படும் - கலாஜோதி அகத்தொழில், 147 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

### மருத்தீட்டு வைத்தியம்

மருத்தீடு, கைமயக்கு, மருத்தீட்டுப் பைத்தியம் குணப்படுத்த உத்தரவாதம். நேரில் வந்து கலந்தாலோசிக்கவும். **தி. திருநாவுக்கரசு,** சரசாலை வடக்கு, சாவகச்சேரி P. O.


# "கடன்நிதியால் அபிவிருத்தி ஏற்படாது"

## எம். ஈ. பி. தலைவர் கருத்து

களனி, செவ்வாய்

"நாட்டின் பொருளாதாரத்தை ரஷ்யாவிலிருந்தோ, அமெரிக்காவிலிருந்தோ அல்லது உலகவங்கியிலிருந்தோ பெற்றுக்கொள்ளக் கூடும் கடன் நிதியினால் அபிவிருத்தி செய்து விடலாம் என்று நினைப்பது முட்டாள்தனம்" என்று எம். ஈ. பி. கட்சித் தலைவர் திரு. பிலிப்குணவர்த்தன இலங்கைப் பொருளாதாரத்தின் எதிர்காலம்' என்னும் பொருள்பற்றி வித்தியாலங்கார பல்கலைக் கழகப் பட்டதாரி மாணவர் பொருளாதாரச் சங்கத்தின் கூட்டமொன்றில் பேசுகையில், கூறினார்.

"பொருளாதாரம் பற்றிப் பாராளுமன்றத்தில் உரைநடத்துவது இன்று ஒரு வழக்கமாக வந்துவிட்டது. ஆனால் பொருளாதாரம் பற்றிப் பேசுவோர்களில் பலருக்குத் தாம் என்ன பேசுகிறார்கள் என்றே தெரியவில்லை. பொருளாதாரக் கல்வி சிறிதும் பயிலாத சில அத்துவக்காத்துக்கள் கூடப் பொருளாதாரம் பற்றிப் பேச முற்படுகின்றனர். பொருளாதார பாடம் படிக்காமல் எப்படி நாட்டின் பொருளாதார முன்னேற்றம் பற்றி நாம் ஆராய்ச்சி செய்யலாம்" என்று திரு. குணவர்த்தன கூறினார்.

திரு. பிலிப் குணவர்த்தன மேலும் கூறியதாவது:-

நிலமில்லாதவர்களுக்கு நிலத்தைக் கொடுப்பதனால் மட்டும் நிலமற்றவர் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது. பயிரிடும் முறைகளில் மாற்றங்களையும் மக்கள் வேலையிலமர்ந்து கொள்வதற்கு வசதிகளையும் உண்டாக்கினால் தான் எதிர்காலத் தேவைகளைச் சமாளித்துக் கொள்ளலாம்.

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாகத் தோட்டப் பயிரிடுகையில் ஒருவித திருத்தங்களும் செய்யப்படவில்லை. தென்னந் தோட்டங்கள் சீரழிந்து போகும் நிலையிலிருக்கின்றன. இன்னும் சில வருடங்களில் தென்னந் தோட்டங்களே இல்லாமற் போய்விடக் கூடும்.

நன்கு வளர்ச்சியடைந்த கைத்தொழில் ஒன்று இங்கு இருக்கின்றதானால் அது கசிப்பு உற்பத்திக் கைத்தொழில் ஒன்றே. கூட்டுறவுச் சங்கங்கள் கொடுக்கும் கறுப்புச் சீனியில் பெருந்தொகை 'கசிப்பு' முதலாளிகளையே சென்றடைகிறது.

இலங்கை பெரிய கைத்தொழில்களை ஆரம்பிக்குமுன்னர் இலங்கையரை வெளிநாடுகளுக்கு அனுப்பித் தொழில் நுட்பக் கல்விபயிற்றுவிப்பது அரசாங்கததின் கடமை என்று திரு. குணவர்த்தன குறிப்பிட்டார்.

கூட்டத்திற்குத் திரு. டபிள்யு சமரசேன தலைமை வகித்தார். திரு. டபிள்யு டி. இ. குணத்திலகா நன்றி கூறினார்.

### பிக்குவின் கண் தானம்

கொழும்பு, புதன்

இலங்கை கண் தான சங்கத்துக்கு பம்பலப்பிட்டி வஜிராருமயாவைச் சேர்ந்த மதுகிபன்னசிகா மகாநாயக்க தேரோ எழுதிய கடிதமொன்றில், தாம் இறந்தபின்னர் தமது கண்களைத் தானம்செய்வதாக வாக்களித்துள்ளார்.

இத்தகவலை கொழும்பில் நடைபெற்ற கண்தானம் சங்கத்தின் கூட்டத்தில், சங்கத் தலைவர் டாக்டர் ஹட்சன் சில்வா தெரிவித்தார்.

### 50 மாணவரின் அவல நிலை

#### இடம் கிடைத்தும் பணம் கிடைக்கவில்லை

கொழும்பு, ஜூன் 21

சென்னை, சைதாப்பேட்டை வை. எம். ஸி. ஏ. உடல் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிபெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட 50 மாணவர்களுக்குப் பணம் அனுப்ப உத்தரவு கொடுக்க இலங்கை அரசாங்கம் மறுத்துவிட்டது.

சைதாப்பேட்டை உடற்பயிற்சிக் கல்லூரி அதிபரால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த ஐம்பது மாணவர்களும் அந்தக் கல்லூரியால் நடத்தப்பட்ட இரண்டு நாள் எழுத்துப் பரீட்சையிலும், செயல்முறைப் பரீட்சையிலும் சித்திபெற்றவர்களாவர். அவர்களுடைய பயிற்சிக் காலம் ஜூலை மாதம் முதல் திகதியில் இருந்து ஆரம்பமாக இருக்கிறது

வெளிநாடுகளுக்குப் பயில்வதற்காகச் செல்லும் எந்த மாணவருக்கும் அவர்கள் போவதற்கு வேண்டிய 'பாஸ்போர்ட்' பெறுவதற்கான கடிதங்கள் வழங்கக் கூடாதென அரசாங்கம் அறிவித்துள்ளதன் பேரில் தாங்கள் கடிதம் கொடுக்க மறுத்ததாகக் கல்வி இலாகா அவர்களுக்குத் தெரிவித்துள்ளது.

மேலும் உடற்பயிற்சி பெற்ற பெருந் தொகையினர் வேலையில்லாமல் ஏற்கனவே கஷ்டப்பட்டுக் கொண்டு இருப்பதாக கல்வி இலாகாவைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

### 30 பிக்குகளுக்கு வேலை இல்லை

கொழும்பு, ஜூன் 21

அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரியப் பதவிக்காக நியமனக் கடிதங்கள் பெற்ற 30 புத்த பிக்குகளின் நியமனங்களை ரத்து செய்து விட்டதாக கல்வி இலாகா அறிவித்துள்ளது.

ஜூன் 1-ம் திகதிக்குப் பிறகு நியமனம்பெற்ற குருமாரின் சேவையை ரத்து செய்வது என்று அரசாங்கம் தீர்மானித்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வித்தியாலங்கார பல்கலைக் கழக விரிவுரையாளரான ஹேவன் போலரட்ன சார தேரோ. இது சம்பந்தமாக ஆட்சேபக் கடிதம் ஒன்றை பிரதமருக்குச் சமர்ப்பித்துள்ளார்.

### விமானத்தைத் திருப்பித் தரவும்

காபூல், ஜூன் 21

வானிலை காரணமாக சென்ற ஞாயிற்றுக்கிழமை பெஷாவரில் கட்டாயமாக இறங்கவேண்டி நேர்ந்த வெடி விமானத்தைத் திரும்பித்தருமாறு பாகிஸ்தான் அரசாங்கத்திடம் ஆப்கானிஸ்தான் அரசாங்கம் கேட்டுள்ளது.

காபூலிலுள்ள பாகிஸ்தான் ஸ்தானிகர் மூலம் இக்கோரிக்கை கொண்ட ஒரு குறிப்பை ஆப்கன் அரசாங்கம் கொடுத்துள்ளது.

### பீடிக்குள் அபின்

#### பிக்குவுக்கு சிறைத்தண்டனை

இரத்தினபுரி, புதன்

பீடி ஒன்றுககுள் 40 கழஞ்சு அபினை வைத்திருந்ததாக மினுவாங்கொடை புறன ருஜ மகா விகாரையைச் சேர்ந்த பௌத்த பிக்குவான நில் பனகொட தர்மானந்தா தேரோ மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில், இரத்தின புரி நீதிபதி திரு. கே. ஏ. பி. றணசிங்கி ஒருவார கால சிறைத்தண்டனை விதித்தார்.

அக்குற்றத்திற்காக நீதிபதி ரூ. 40 குற்றப்பணம் செலுத்துமாறு தேரோவை உத்தரவிட்டிருந்தார். ஆனால், தேரோ குற்றப்பணம் செலுத்த ஒப்புக்கொள்ளாதபடியால், நீதிபதி ஒருவாரச் சிறைத் தண்டனை விதித்தார்.

### ஐக்கிய அரபு இராணுவத் தலைமை

கெய்ரோ, ஜூன் 20

ஐக்கிய அரபுக் குடியரசுத் தலைமையில் ஐக்கிய இராணுவத் தலைமையொன்றை அமைக்க, அரபு லீக் நாடுகள் சம்மதம் தெரிவித்திருப்பதாக தெரிகிறது.

அரபு லீக் நாடுகளின் மகாநாடு ஒன்று இங்கு 8 தினங்களாக நடைபெறுகிறது. பல நாடுகளின் பாதுகாப்பு மந்திரிகள், பிரதம தளபதிகள் இம் மகாநாட்டில் கலந்துகொள்கின்றனர்.

### நிதி முடிந்துவிட்டது

கொழும்பு, புதன்

உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் நெல் கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியை மூன்று மாதத்துக்கு முன்னதாகவே அரசாங்கம் செலவு செய்துவிட்டது.

தற்போதைய அறுவடையின் போது நெல் வாங்குவதற்காக உபமான்யப் பிரேரணையொன்றைக் கொண்டுவருவதற்கு நிதி மந்திரியிடம் கோருமாறு விவசாய அமைச்சு அதிகாரிகள் கூறிய யோசனையை பதில் விவசாய நீர்ப்பாசன மந்திரி திரு. தென்னக்கூன் பரிசீலனை செய்துவருகிறார்.

### மேலும் 3 கட்சி அதிகாரிகள் நீக்கப்பட்டனர்

மாஸ்கோ, ஜூன் 20

திறமையும், நேர்மையுமற்ற அதிகாரிகளைக் களைந்தெறிய குருஷேவ் மேற்கொண்டுள்ள தீவிர முயற்சியின் ஒரு பகுதியாக மேலும் 3 கட்சி அதிகாரிகள் நீக்கப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

### ஜோர்டான் பத்திரிகை மூடப்பட்டது

அம்மான், ஜூன் 21

'ஹால் அலால் அம்' என்ற ஜோர்டானிய வாரப் பத்திரிகையின் லைசென்ஸை அரசாங்கம் ரத்துச் செய்துவிட்டது.

மறு உத்தரவுவரையில், இப் பத்திரிகை மூடப்பட்டது.

### தலைவர்கள் மகாநாடு

புதுடில்லி, ஜூன் 20

வகுப்புவாதம், தேசிய ஒருமைப்பாடு பற்றிய பிரச்சினைகளை விவாதிக்க, எல்லாத் தரப்பு தலைவர்களின் மகாநாட்டை பாரதப் பிரதமர் நேரு விரைவில் கூட்டுவார் எனத் தெரிகிறது.

### டி'கால் மாளிகை அருகில் வெடிகுண்டு

பாரிஸ், ஜூன் 21

பாரிஸில் டி'கால் வசிக்கும் மாளிகைக்கு அருகில் உள்ள ஒரு வீட்டின் நான்காவது மாடியில், வெடிகுண்டொன்று வெடித்ததின் விளைவாக 6 பேருக்கு லேசாகக் காயம் ஏற்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

### புதிய திரவகம்

புதுடில்லி, ஜூன் 21

இரும்பு, உருக்கு முதலிய பொருட்களிலே உள்ள வெடிப்புக்களைக் கண்டுபிடிக்கத் தக்க திரவகம் இனி உள்நாட்டுப் பொருட்களிலிருந்தே உற்பத்தி செய்யமுடியும் என்று இந்திய தேசிய ஆராய்ச்சிக்கழகம்கண்டுபிடித்துள்ளது.

### குருடர்களுக்கு இலவச பாஸ்

பம்பாய், ஜூன் 21

பம்பாய் நகரிசபை நடத்தும் 'பஸ்' சேவையில், அந்தகர்களுக்கு இலவச 'பாஸ்' வழங்கும் திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது. இந்தச் சலுகை பெறுவதற்காக, முதலில் 50 குருடர்கள், பார்வையற்றோர் நிவாரண சங்கத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்.

### வட அங்கோலா: மக்கள் அனைவரும் ஓட்டம்

#### பாதிரியார் தகவல்

லண்டன், ஜூன் 20

மக்கள் பெருமளவில் வெளியேறிவிட்டதால், வட அங்கோலா முழுவதும் காலியாகிவிட்டது என்று "கார்டியன்" பத்திரிகை கூறுகிறது.

வட அங்கோலாவில் தாம் தங்கியிருந்த இடத்திலிருந்து வெளியேறிய ஒரு பெரிய பாதிரியுடன் டெலிபோன் மூலம் சம்பாஷணை நடத்திய பிறகு, இத்தகவலை அப்பத்திரிகை வெளியிட்டது.

நடக்கமுடியாத நிலையிலுள்ள வயோதிபர்களையும், அங்கஹீனர்களையும் தவிர்த்து எல்லோரும் ஓடிவிட்டார்கள் என்றும் தம்மை வெளியேறுமாறு உத்தரவுபிறப்பித்துவிட்டு அந்த இடத்தை போர்த்துக்கீஸிய இராணுவம் பயன்படுத்திக்கொள்கிறது என்றும் அவர் கூறினார். தாம் 28 வருட காலம் சமயப் பணி புரிந்த இடம் அது என்றும் அப்பாதிரியார் தெரிவித்தார்.


**டயரும்ஸ்**

விற்பனையில்

புதிய "(f) பெதறெற்" நூற் சேலைகள்

பசுமையான நிறங்களில் நிபன் போடரிட்டவை அணிவதற்கு லேசானவை.

ரூபா 24/75 மாத்திரம்

**டயரும்ஸ்**

பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

# "அமெரிக்கர் லாவோஸிலிருந்து வெளியேற தயார்! ஆனல் ரஷ்யர்களும் வெளியேறவேண்டும்"

## ஜெனிவா மகாநாட்டில் ஹரிமன் அறிவிப்பு

ஜெனிவா, ஜூன் 21

"லாவோஸிலுள்ள ரஷ்ய ராணுவ ஆலோசகர்களும் தொழில் நுட்ப நிபுணர்களும் திருப்பி அழைக்கப்படுவார்களென உத்தரவாதமளிக்கப்படுமானல் லாவோஸிலுள்ள அமெரிக்க இராணுவ ஆலோசகர்களை அமெரிக்கா திருப்பி அழைக்கத் தயாராக இருக்கிறது" என்று அமெரிக்க பிரதிநிதி திரு. அவரேல் ஹரிமன் நேற்று ஜெனிவா மகாநாட்டில் கூறினர்.

ஜெனிவாவில் நடைபெறும் லாவோசுக்கான 14 நாடுகளைக் கொண்ட சர்வதேசக்கமிஷனின் மகாநாட்டின் நேற்றைய கூட்டம் சர்வதேசக் கமிஷனின் கூட்டு உதவித் தலைவர்களான சோவியத் உதவி வெளிவிவகார மந்திரி திரு. புஷ்கின் பிரிட்டிஷ் பிரதிநிதி திரு. மால்கம் மாக்டனல்ட் தலைமையில் நடைபெற்றது.

லாவோஸிலுள்ள ரஷ்ய ராணுவ ஆலோசகர்கள் வெளியேறுவதற்கு உத்தரவாதமளிக்கப்பட்டால் அங்குள்ள அமெரிக்க இராணுவ ஆலோசகர்களை திருப்பி அழைத்துக்கொள்ள அமெரிக்கா தயாராயிருக்கிறது என்று அறிவித்த அமெரிக்க பிரதிநிதி திரு. ஹரிமன் லாவோஸிலிருந்து ராணுவ ஆலோசகர்கள் அங்குள்ள சர்வதேசக் கட்டுப்பாட்டுக் கமிஷனின் உறுதியான மேற்பார்வையின் கீழேயே வெளியேற்றப்படவேண்டுமென்று கூறினர்.

1954-ம் வருடத்தில்ஜெனிவா மகாநாட்டில் லாவோஸ் பற்றி ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் லாவோஸுக்குச் சென்ற அந்நிய ராணுவமும் ராணுவ ஆலோசகர்களும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு சுதந்திர நடுநிலைமை லாவோஸ் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்று அமெரிக்கப் பிரதிநிதி திரு. ஹரிமன் கூறினர்.

### சூரிச் மகாநாடு

லாவோஸில் ஒரு கலப்பு அரசாங்கம் அமைப்பது சம்பந்தமாக லாவோஸின் வலதுசாரித் தலைவர் இளவரசர் பூன்ஊம், இடதுசாரித் தலைவர் இளவரசர் சொவன்ன வாங், நடுநிலைமைப் பிரதமர் இளவரசர் சுவன்ன பூமா ஆகியோர் சுவிட்சர்லாந்தில் சூரிச் என்ற நகரத்தில் கூடி பேச்சுவார்த்தை நடத்திவருகின்றனர். முத்தரப்புத் தலைவர்களும் நேற்று இரண்டாவது தடவையாகக் கூடிப் பேசுவதாக இருந்தது ஆனல் இளவரசர் சுவன்னபூமாவுக்கு உடல்நிலை சரியாயில்லாததால் நேற்று பேச்சுவார்த்தை நடைபெறவில்லையென அறிவிக்கப்பட்டது.

முத்தரப்புத் தலைவர்களுக்கிடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் மந்தநிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதனல்தான் நேற்று மகாநாடு நடைபெறவில்லையென்றும் மற்ருெரு வட்டாரம் தெரிவித்தது.

### வலதுசாரியினர் வெளியேற்றம்

லாவோஸில் சிலதினங்களுக்கு முன் ஜார்ஸ் வெளிப் பிரதேசத்தில் படோங் என்ற இடத்தை இடதுசாரியினரான பதட் லாவோ படைகள் கைப்பற்றியதைத் தொடர்ந்து ஜார்ஸ் வெளிப்பிரதேசத்திலுள்ள வலதுசாரிப் படைகள் அங்கிருந்து வெளியேறுவதாக ஒரு செய்தி கூறுகிறது.

---

## ஒரிஸாவுக்கு 8 மந்திரிகள்

### நேருஜியுடன், பட்நாயக் ஆலோசனை

புதுடில்லி, ஜூன் 21

ஒரிஸ்ஸா ராஜ்ய காங்கிரஸ் தலைவரும் ஒரிஸ்ஸாவில் புதிய மந்திரிசபையை அமைக்கவிருப்பவருமான திரு. விஜயானந்த பட்நாயக் நேற்று புதுடில்லி வந்து சேர்ந்து பிரதமர் நேருவைச் சந்தித்துப் பேசினர். தமது புதிய திட்டங்கள்பற்றி திரு. பட்நாயக் நேருவிடம் கூறியதாகத் தெரிகிறது.

தமது மந்திரிசபையில் எட்டு மந்திரிகளே இருப்பார்களென்றும் உதவி மந்திரிகளின் எண்ணிக்கை பற்றி இன்னும் ஒரு இறுதியான முடிவும் செய்யப்படவில்லையென்றும் திரு. பட்நாயக் பின்னர் நிருபர்களிடம் தெரிவித்தார்.

ஒவ்வொரு பஞ்சாயத்திலும் புதிய கைத்தொழில் திட்டங்கள் ஆரம்பிக்கப்படுமென்றும் இக்கைத்தொழில் திட்டங்களுக்கு 30 கோடி ரூபாய் செலவிடப்படுமென்றும் திரு. பட்நாயக் தெரிவித்தார். நிலச் சீர்திருத்தத் திட்டமொன்றும் கொண்டுவரப்படுமென்றும் நிலமில்லாத பலருக்கு இத்திட்டத்தின்மூலம் நிலம் கிடைக்குமென்றும் இதனல் பொருளாதாரம் அபிவிருத்தியடையுமென்றும் திரு. பட்நாயக் கூறினர்.

---

டோக்கியோ, ஜூன் 21

1964-ம் ஆண்டு நடக்க இருக்கும் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியை டோக்கியோவில் நடத்துவதாக சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டுச் சங்கம் தீர்மானித்துள்ளது.

---

## 1962- பெப்ரவரியில் இந்திய பொதுத் தேர்தல்

### கேரளம், ஒரிஸ்ஸாவில் தேர்தல்நடைபெருது

புதுடில்லி, ஜூன் 21

1962 ம் ஆண்டு பெப்ரவரி மாத பிற்பகுதியில் பொதுத் தேர்தல் நடைபெறுமென்று இந்திய தலைமைத் தேர்தல் கமிஷனர் திரு. கே. வி. கே. சுந்தரம் நேற்று தெரிவித்தார்.

தேர்தல் ஆரம்பமாகும்தினம் இன்னும் திட்டவட்டமாக முடிவு செய்யப்படவில்லையாயினும் பெப்ரவரி 20-ந் திகதியிலிருந்து 28-ந் திகதிக்குள் தேர்தல் நடைபெற்று முடிந்துவிடுமென்றும், ஒருவாரகாலத்துக்குள் வாக்களிப்பு நடைபெற்று முடிந்துவிடுமென்றும் திரு. சுந்தரம் கூறினர்.

சமீபத்தில் இடைத்தேர்தல் நடந்துமுடிந்த கேரள, ஒரிஸ்ஸா ராஜ்யங்களில் தேர்தல் நடைபெறமாட்டாதென்றும் திரு. சுந்தரம் அறிவித்தார்.

---

## அல்ஜீரிய தேசிய தலைவர்கள் திருப்தி

லண்டன், ஜூன் 21

அல்ஜீரிய சுதந்திரம் பற்றி அல்ஜீரிய தேசிய தலைவர்களுக்கும் பிரெஞ்சு அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் ஈவியன் பட்டினத்தில் நடைபெற்ற மகாநாட்டை திடீரென்று பிரெஞ்சு அரசாங்கத்தினர் நிறுத்தியதைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள நிலைமைபற்றி அல்ஜீரிய தேசியத் தலைவர்கள் நேற்று டுனிஷியாவில் கூடி ஆராய்ந்தனர்.

ஈவியன் பேச்சுவார்த்தையில் அல்ஜீரிய தேசியப் பிரதிநிதிகள் நடந்துகொண்ட முறைக்கு தலைவர்கள் திருப்தி தெரிவித்தனர்.

---

மாஸ்கோ, ஜூன் 21

சோவியத் ரஷ்யாவின் வான வெளி மனிதன் மேஜர் காகரினை இந்தியாவுக்கு விஜயம் செய்யுமாறு இந்தியா சோவியத் நட்புச் சங்கத் தலைவர் திரு. ஏ. பாலிகா அழைத்துள்ளார்.

மேஜர் காகரினைப் பார்க்கவும் அவரது பேச்சைக் கேட்கவும் இந்திய மக்கள் பெரும் ஆவல்கொண்டுள்ளதாக திரு. பாலிகா தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

---

உலகப்பிரச்சினைகள்பற்றியும் சமீபத்தில் வியன்னவில் திரு. கென்னடியும் திரு. குருஷேவும் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றியும் இவர்கள் பேசியதாக அமெரிக்க வெளிவிவகார மந்திரி திரு. டீன்றஸ்க் பின்னர் தெரிவித்தார்.

---

## பம்பாயில் பலத்த மழை

பம்பாய், ஜூன் 21

பம்பாயில் பருவ மழை கடுமையாகப் பெய்யத் தொடங்கியுள்ளது. பம்பாயின் தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் நிற்கத் தொடங்கியுள்ளது. நகரில் தேங்கி நிற்கத் தொடங்கிய வெள்ளத்தை நகராண்மைக் கழக ஊழியர்கள் வெளியேற்றுவதில் ஈடுபட்டுள்ளனர். வாகனப் போக்குவரத்து மழைகாரணமாக சீராக நடைபெற முடியாதுபோய்விட்டது.

---

## இக்கேடா-கென்னடி சந்திப்பு

வாஷிங்டன், ஜூன் 21

ஜப்பானிய பிரதமர் திரு. இக்கேடாவும் அமெரிக்க ஜனதிபதி கென்னடியும் நேற்று சந்தித்துப் பேசினர்.

---

அஸ்ஸாம்

## கயிலாக்கண்டி கலக பிரதேசமென பிரகடனம்

### மற்றுமொருவர் மாண்டார்

ஷில்லாங், ஜூன் 21

அஸ்ஸாம ராஜ்யத்தில் கச்சார் ஜில்லாவில் கயிலாக்கண்டி என்ற பிரதேசத்தில் சென்ற திங்கட்கிழமை நடைபெற்ற கலகத்திலும் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததிலும் மாண்டவர் தொகை இப்பொழுது எட்டாக உயர்ந்துள்ளது. முன்னர் ஏழுபேர் மாண்டதாக அறிவிக்கப்பட்டது. காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் மற்ருெருவர் நேற்று காலமானர். காயமடைந்த மற்றும் 20 பேர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

கயிலாக்கண்டி உட்பட கச்சார் ஜில்லாவில் இப்பொழுது அமைதி நிலவுகிறதென்ருலும் கயிலாக்கண்டி ஒரு கலகப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இராணுவத்தினர் முக்கிய இடங்களில் காவல்புரிந்து வருகின்றனர். வீதிகளில் இராணுவத்தினரும் பொலிசாரும் சேர்ந்து சுற்றிவருகின்றனர்.

12 மணி நேர ஊரடங்குச் சட்டம் ஒருவாரகாலத்துக்கு அமுலில் இருக்கும்.

நான்கு பேருக்கு மேல் கூடி நிற்கவோ, கத்தி போன்ற ஆயுதங்கள் கூடக் கொண்டு செல்லவோ அங்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. இத்தடை உத்தரவு ஒரு மாதகாலத்துக்கு அமுலிலிருக்கும்.

வங்காள மொழியையும் அஸ்ஸாம் ராஜ்ய மொழியாக்க வேண்டுமெனக் கோரி சங்கராம் பரிசித் நடத்திய கிளர்ச்சிக்கு எதிராக சென்ற திங்கட்கிழமை சுமார் 10,000 பேர் அங்கு ஆர்ப்பாட்டம் செய்ததனல் இக்கலகம் ஏற்பட்டது.

கயிலாக்கண்டி சம்பவம் பற்றி இந்திய உள் விவகார மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி நேற்று புதுடில்லியில் வேதனை தெரிவித்தார்.

எந்தப் பிரச்சினையையும் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்க்க முயற்சி செய்யவேண்டுமே தவிர கிளர்ச்சியினலும் பலாத்கார நடவடிக்கைகளினலும் தீர்வுகாண முயற்சி செய்யக்கூடாது என்று திரு. லால்பகதூர் சாஸ்திரி கூறினர்.

சம்பந்தப்பட்ட பகுதி மக்கள் எல்லோரையும் அங்கு அமைதியை நிலைநாட்ட ஒத்துழைக்குமாறு திரு. சாஸ்திரி வேண்டிக்கொண்டார்.

கச்சார் ஜில்லா சங்கராம் பரிஷத் தலைவர்கள் மொழிப் பிரச்சினை சம்பந்தமாக திரு. லால்பகதூர் சாஸ்திரியை விரைவில் சந்தித்துப் பேசவிருக்கின்றனர்.

---

## ரஷ்யா அமெரிக்காவில் தமிழ் நூல்கள் மொழி பெயர்ப்பு

மாஸ்கோ, ஜூன் 20

சோவியத் யூனியனில் தமிழ் மணம் கமழத் துவங்கியிருக்கிறது. திருக்குறள் ரஷ்ய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு வருகிறது. பெரிய அளவில் பாரதியாரின் கவிதைத் தொகுப்பு ஒன்று அச்சேற இருக்கிறது. பாரதியார்பற்றி இதுவரை உலகில் வெளிவராத அரியதோர் தொகுப்பு நூலாக இது திகழுமாம். ரஷ்யாவில் பலர் தமிழ் மூல நூல்களையே படிக்கின்ற அளவிற்குத் தமிழறிவு பெற்றிருக்கிருர்களாம். பாரதிதாசன், மு. வ., கி. வா. ஜ., தூரன், கல்கி, ராஜாஜி போன்றவர்களின் படைப்புக்களையும், சிலப்பதிகாரம், நாலடியார், திருவாசகம் போன்ற பண்டையத் தமிழ் நூல்களையும், தமிழ் மொழி பயிலும் மொழியியல் மாணவர்களும், மொழியியல் அறிஞர்களும், இலக்கிய விற்பன்னர்களும் பயின்று வருகிருர்கள்.

சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியான அனந்தநாராயணன் எழுதிய நாவலை, நியூயார்க் 'கிரைட்டீரியன் புக்' என்ற நூல் நிலையம் ஜூன் 19-ம் திகதி வெளியிடுகிறது.

நூலின் பெயர் "ஸில்வர் பில்கிரிமேஜ்." இடைக்கால இந்தியாவைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கும் இந்த நாவல், இலங்கை இளவரசர் ஒருவரின் அனுபவங்களைச் சித்திரிக்கிறது. நமது நாட்டை ஆளுவதற்கு வேண்டிய அறிவும், வலிமையும் பெற இந்த இளவரசர் காசிக்குப் புனித பயணமொன்றை மேற்கொள்கிருர்.

---

## காங்கோ பார்லிமெண்ட்; கடாங்கா எம். பீ. கள் பகிஷ்கரிப்பு

லியப்போல்ட்வில்லி, ஜூன் 21

காங்கோ பார்லிமெண்டை லியப்போல்ட்வில்லிக்கு அருகிலுள்ள ஒரு இடத்தில் கூட்டுவதற்கு லியப்போல்ட்வில்லி அரசாங்கமும் ஓமும்பா ஆதரவுள்ள ஸ்டான்லிவில்லி அரசாங்கமும் ஒப்புக்கொண்டுள்ளன.

காங்கோ குடியரசின் பார்லிமெண்ட் சுமார் ஒன்பது மாதங்களுக்குப் பின் முதல் தடவையாக இம்மாதம் 25 ம் திகதி கூடவிருக்கிறது.

காங்கோ பார்லிமெண்ட் கூட்டத்தில் தாங்கள் கலந்துகொள்ளப்போவதில்லையென்றும் கூட்டத்தைப் பகிஷ்கரிக்கப் போவதாகவும் கடாங்கா மாகாணத்தைச் சேர்ந்த 20 எம். பி.க்கள் தெரிவித்துள்ளனர்.

லியப்போல்ட் வில்லி அரசாங்கத்தினல் சிறைவைக்கப்பட்டுள்ள கடாங்கா ஜனதிபதி ஷோம்பே விடுதலைசெய்யப்படவேண்டுமென்றும் காங்கோ பார்லிமெண்ட் கூட்டம் கடாங்கா மாகாணத்தில் நடைபெறவேண்டுமென்றும் அந்த 20 எம். பி.க்களும் தெரிவித்துள்ளனர்.

காங்கோ பார்லிமெண்ட் இம்மாதம் 25-ந் திகதி கூடும் பொழுது லியப்போல்ட்வில்லியிலுள்ள காங்கோ துருப்புக்கள் ஆயுதங்களைக் களைந்து ஐ. நா. துருப்புக்களின் மேற்பார்வையில் வைப்பதற்கும் பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் வெளியாருடன் தொடர்பு கொள்ளக் கூடாதென்றும் டெலிபோன் தொடர்புகூட இருக்கக் கூடாதென்றும் லியப்போல்ட்வில்லி அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் ஸ்டான்லிவில்லி அரசாங்கப் பிரதிநிதிகளுக்கிடையில் உடன்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து காங்கோ பார்லிமெண்ட் இம்மாதம் 25-ந் திகதி லியப்போல்ட்வில்லிக்கு 8 மைல் தூரத்தில் கூடவிருக்கிறது.

இந்தப் பார்லிமெண்ட் ஞாயிற்றுக்கிழமை கூடும் பொழுது காங்கோ குடியரசின் முதலாவது சட்டபூர்வமான முதல் மந்திரி லுமும்பா இருக்க மாட்டார்.

காங்கோ பார்லிமெண்ட் கூடும் பொழுதும் எம். பி.க்களுக்கு ஐ. நா. பாதுகாப்பளிக்கும்

## மணிவாக்கு

எல்லாக் கடமைகளையும் பரித்தியாகம் செய்துவிட்டு என்னையே சரண்புகு. நான் உன்னை எல்லாப் பாவங்களினின்றும் விடுவிக்கிறேன். துயரப்படாதே.

—பகவத்கீதை


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஆனி மீ 8௳ (22-6-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## தேசிய கல்விமுறையும் அரசியல்வாதிகளும்

கல்வியாளரும், இலங்கைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளருமான திரு. நேசையா, யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியிலே நேற்று முன்தினம் கல்வியைப் பற்றி ஓர் அருமையான பிரசங்கம் செய்துள்ளார். இதன் சாராம்சம் நேற்று 'ஈழநாடு' பத்திரிகையில வெளியாயிற்று அந்தப் பிரசங்கத்தில் அடங்கிய கருத்துக்கள் சிறப்பாக இந்நாட்டுக் கல்வி வளர்ச்சிக்கு நல்ல வழிகாட்டுவதாகும்.

நாட்டின் எதிர்காலக் "தேசிய கல்வி முறையை" வகுக்க இப்போது ஒரு விசாரணைக் கமிஷன் முயன்றுவருகிறது. அக் கமிஷன் முன் பலர் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துவருகின்றனர். இவற்றையெல்லாம் பரிசீலனை செய்து அக்கமிஷன் ஓர் அறிக்கையை அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்கும். பின்னர் அந்த அறிக்கையை அரசாங்கக் கட்சி பரிசீலனை செய்து, தங்கள் உசிதப்படி சட்டமாக்கி அமுலுக்குக் கொண்டுவரக் கூடும். அந்தச் சட்டமும், தேசியக் கல்வியின் தலையெழுத்தும், அரசியல்வாதிகளின் கையில் தான் அநேகமாக இருக்கும்.

தேசியக் கல்வி முறை அரசியல்வாதிகளால் உருவாக்கப்படக் கூடாதென்றும், அது மக்களிடமிருந்தே எழவேண்டுமென்றும், இடித்துக் கூறுகின்ருர் திரு. நேசையா. இன்று அமுலில் இருந்துவரும் கல்வி முறையை வகுத்தது பிரிட்டிஷ் ஆட்சியாளர். தங்கள் அரசியல் தேவைக்கும் நன்மைக்குமான வகையிலேயே அவர்கள் இக் கல்விமுறையைத் தயாரித்தனரேயன்றி, இந்நாட்டு மக்களின் நன்மைக்காகவோ நாட்டின் முன்னேற்றத்துக்காகவோ அல்ல. மக்களைக்கலந்து கொண்டும் இதைத் தயாரிக்கவில்லை. ஆகவே இக் கல்வி பயின்ற மாணவ மாணவிகளில் பெரும்பாலோர் நிலை, கண்ணைக்கட்டி காட்டில் விட்டதுபோல், செய்யும்வகை அறியாது உள்ளது. பெரும் செலவு செய்தும், பல வருஷங்கள் பாடுபட்டும், இக்கல்வியால், மாணவருக்கோ நாட்டுக்கோ திட்டமான பலன் எதுவும் காணமுடியாதுள்ளது.

இந்த அவலநிலையை மாற்ற தேசியக்கல்விமுறையை அமைக்கப்போவதாக கல்வி அமைச்சர் கூறுகின்ருர். "ஆனல் தேசியக் கல்விமுறை" என்பதின் நோக்கமும் கருத்தும் இது வரை சரியாக விளக்கப்படவில்லை. தேசமக்களின் நன்மைக்கான முறையில், நாட்டின் தேவையைப் பூர்த்திசெய்து வழிகாட்டக்கூடியதாகவே கல்விமுறை இருக்கவேண்டும். அதைப் பயிலுபவர்கள் தங்களுக்கும் நாட்டுக்கும் பயன்படவேண்டும். தங்கள் வாழ்க்கையை நல்லபடியாக நடத்த மாணவர்கள் ஒரு தொழிற் பயிற்சியையும் பெறக்கூடியதாக அக்கல்விமுறை உதவவேண்டும். அதுவே தேசியக் கல்விமுறையாக இருக்கமுடியும்.

பாடசாலைகள், சமூகப் பாடசாலைகளாக இருக்கவேண்டுமென்றும், அவை சமூகசேவையிலீடுபடவேண்டுமென்றும், பாடசாலைகளே ஒரு சமூகமாக இருக்கவேண்டுமென்றும் கூறுகிருர் திரு. நேசையா. கல்விச்சுதந்திரமிருந்தால்தான் பாடசாலைகளும் இவ்விதம் சேவை செய்ய முடியும். ஆங்காங்கே தேவைக்கான முறையில் மக்கள் சமூகமே, பள்ளிக்கூடங்களை பொறுப்பேற்று நடத்தக்கூடியதாக இருக்க வேண்டும். அரசாங்கம் இதற்கான முறையில் உதவிசெய்யலாமேயன்றி, தானே சர்வாதிகாரிபோல் இருந்து தன் இஷ்டப்படி ஆட்டிவைக்கப்படாது. அப்போதுதான் தேசியக் கல்விமுறை சுதந்திரமாக வளர்ந்து, நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை செய்ய முடியும். கல்விக் கமிஷன் இதற்கான முறையில் தக்க யோசனைகள் கூறுமென்றே நம்புவோம்.

# ரஷ்யாவுக்கு வழிகாட்ட வள்ளுவர் திருக்குறள்

**உலகப் பொது நூலாகிய திருக்குறள் பல்வேறு மொழிகளிற் பெயர்க்கப்பட்டுள்ளன. சிங்கள மொழி பெயர்ப்பொன்றும் விரைவில் வெளியாகவிருக்கின்றது. ரஷ்யாவிலும் திருக்குறள் இப்போது ரஷ்ய மொழியிற் பெயர்க்கப்படுகின்றதென திரு அலக்சாண்டர் பியாற்றிகோஷ்கி இக்கட்டுரையிற் கூறுகின்ருர். சோவியத் விஞ்ஞானக் கழகத்தின் கீழைத் தேச மொழியாராய்ச்சிப் பகுதியில் இவர் பணியாற்றுகின்ருர்.**

**தமிழ் இலக்கியச் செல்வமாகிய திருக்குறளின் சிறப்பியல்புகள் சிலவற்றை இக்கட்டுரையில் அவர் எடுத்துரைக்கின்ருர்.**

தமிழ் மக்களிடையே திருக்குறள் மிகப் பிரபலமடைந்துள்ள நூல். இது தமிழரின் புனிதமான தேசியப் பொக்கிஷமுமாகும். பல நூற்ருண்டுகளாக இன மத வேறுபாடின்றி எல்லோரும் குறளை விரும்பிப் படித்து வருகிருர்கள். குறள் மக்களால் விரும்பப்படுகின்ற மெய் உணர்வின் கருவூலம் மாத்திரமன்று, இது ஒரு திருமறையாகவும், ஒழுக்க நூலாகவும் கொள்ளப்படுகின்றது. சில சமயங்களில் சட்டத் துறையில் இது பிரமாண நூலாகவும் எடுத்தாளப்படுகின்றது.

தென் தமிழ் நாட்டினரும், இலங்கையரும் ஒழுக்கம் காரணமான சந்தேகங்களிலும், அன்ருட வாழ்க்கைப் பிரச்சினைகளிலும், நீதி விவகாரங்களிலும் திருக்குறளை நாடுகிருர்கள். தெளிவும் கையடக்கமுள்ள விளக்கவுரைகளும், மிகச் சிறந்த திட்ப நுட்பமுடைய ஈரடிச் செய்யுள்களும், திருக்குறளை வேறெந்த இடைக்கால இலக்கிய சிருஷ்டிகளையும் விட முக்கியமான தொன்ருகக் கருதச் செய்கின்றன.

குறள் தமிழரின் வேதநூல் எனறும் சொல்லப்படுகிறது. வேத நூல்களும் விவிலிய நூலும் பல நூற்ருண்டுகளாக, காலப் போக்கில் அடித்தும் திருத்தியும் எழுதப்பட்டதினுல், வெவ்வேறு கால கட்டங்கள், சமூக அமைப்புகள் பற்றியதுமான முன்னுக்குப் பின் முரணுன கருத்துக்களும் இருக்கின்றன. ஆனல், குறள் முழுமெய்யானதும், ஒரே சீராயுமுள்ள கலா சிருஷ்டி. குருமாருக்காகவும், அரசனுக்காகவும் குறளாசிரியர் தமது நூலை ஆக்காமல் மனிதவர்க்கம் முழுமைக்குமே அதனைத் தந்துள்ளார்.

மனிதனைச் சட்டம் இயற்றுபவனுகவும், தீர்க்கதரிசியாகவும் குறிக்காமல், நண்பனுகவும், ஆசிரியராகவும் கொள்கிருர். குறள் ஆசிரியர் தீர்க்கதரிசனமும், விடுகதைகளும் சொல்லவில்லை. விவிலிய நூலைப்போல் மரணம் தவிர்க்க முடியாதது, வாழ்வு அநித்தியம் என்று எல்லாம் கூருமல் அசைக்க முடியாத நம்பிக்கையுடனும், தெளிவுடனும் அவர் எழுதியுள்ளார். கலைஞன், சிந்தனையாளன் என்ற முறையில், தாம் கூறிய உண்மைகளில் அவருக்கு அசைக்க முடியாத நம்பிக்கையிருந்தது.

குறள் ஈரடிச்செய்யுள்களால் ஆன ஒரு நூல் மாத்திரமன்று, அதில் வள்ளுவர், அவர் குடும்பம், வாழ்க்கை பற்றிய கதைகளும் குறிப்புக்களும் இருக்கின்றன. சாதாரண மக்கள் குறளைப் படித்துச் சரியாக விளங்கிக் கொள்ளாமல், வள்ளுவர் வாழ்க்கையைப் பற்றிய பழங்கதைகளை உண்மையென்று நம்பிவிடுகின்றனர்.

### திருக்குறளின் காலம்

மக்களால் விரும்பிப் படிக்கப்பட்டு, இந்திய விவசாயிகளாலும், கலைஞர்களாலும், வியாபாரிகளாலும், கிராமப் பள்ளிக் கூடத்து ஆசிரியர்களாலும் பல சந்தர்ப்பங்களில் சொல்லப்பட்டு வரும் குறளைப் பற்றி சோவியத் ரஷ்ய கீழைத் தேச ஆராய்ச்சியாளர் அக்கறை கொள்ளவில்லை. மெர்தி நூல் வல்லுனர்களும், ஆராய்ச்சியாளர்களும், சரித்திர ஆசிரியர்களும் பிரச்சினைக்கு எடுத்துள்ள குறள் தான் நமது கவனத்திற்குரியது.

சாதாரண மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் குறள் விவகாரங்கள் எல்லாம் உண்மையென்றும், கருத்து வேறு பாட்டுக்கு இடமில்லாதவையென்றும் சொன்னுல், அறிஞர்கள் குறளைப் பற்றிக் கொண்டிருக்கும் கருத்துக்கள் பிரச்சினைக்கும், விவாதத்திற்கும் உரியவை.

திருக்குறளில் காலம் பற்றி அறிஞர்களிடையே நிலவும் முரண்பாடு மிகப்பெரியது. கி. மு. 300 தொடங்கி, கி. பி. 700 க்கு இடைப்பட்ட ஆயிரம் வருஷங்களுக்கிடையில் தான் திருக்குறள் எழுதப்பட்டிருக்க வேண்டும். என்று ஊகிப்பதற்கு விரிவான அடிப்படையில் சரித்திர, தத்துவ, மத சம்பந்தமான ஆராய்ச்சியின்மை தான் காரணம்.

1956-ல் காலமான தமிழ்ப் பேரறிஞர் வையாபுரிப்பிள்ளை, குறளின் காலத்தைப்பற்றிக் கணித்திருப்பதையே சோவியத் ரஷ்ய கீழைத்தேச ஆராய்ச்சியாளர் ஏற்றிருக்கின்றனர். வையாபுரிப் பிள்ளை அவர்களின் கருத்துக்கள், திருக்குறளைப்பற்றிய பழைய கண்ணேட்டத்திற்கும், 19-ம், 20-ம் நூற்ருண்டுத் தமிழ் அறிஞர்களின் கணிப்புகளுக்கும் முரணுனது.

உலக இலக்கியங்களிலும் இந்திய இலக்கியங்களிலும் குறள் முதன்மையானது. அதில் அடங்கியுள்ள கலையம்சங்கள் மாத்திரம் உலகப் பெருமையைத் திருக்குறளுக்குத் தேடித் தரவில்லை. எல்லா நாடுகளுக்கும், எல்லா மக்களுக்கும் பொதுவான மனிதாபிமானம் வள்ளுவருக்குப் பெரும் புகழைத் தந்துள்ளது.

### குறளும் மனிதாபிமானமும்

குறளில் பொதிந்திருக்கும் பொதுவான மனிதாபிமானத்தைக் கண்டு தென்னிந்தியாவிலுள்ள சகல மதத்தினரும் குறளைத் தங்களுடையது என்று சொல்கிருர்கள். கிறிஸ்தவர்கள்கூட முற்காலக் கிறிஸ்தவ சிந்தனைக்கும் குறளுக்கும் காரியார்த்தத் தொடர்பு இருப்பதாகக் கருதுகிருர்கள். இக் காலத்து தமிழ், ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்களில் பலர் திருக்குறளில் காணப்படும் மனிதாபிமானத்துக்கும் சமண மதக் கொள்கைகளுக்கும் ஒருமைப்பாடு இருப்பதால், அது ஒரு சமண நூல் என அபிப்பிராயப்படுகின்றனர். ஆனல் குறள் எந்த மதத்தையோ, சித்தாந்தத்தையே தன்னுள் அடக்கவில்லை. குறளில் மதம் சன்மார்க்க நெறி சார்ந்த கருத்தாக மாறி நிற்கின்றது.

புத்தகங்களுக்கு அவற்றுக்குரிய இலட்சியமும் பயனுமுண்டென பழைய லத்தீன் பழமொழி ஒன்று கூறுகின்றது. குறள் காலத்தைக் கடந்து நிற்கிறது. மக்களின் பேச்சுத் தமிழ் காலப் போக்கில் மாறியதனுல், பல நூற்ருண்டுகளுக்கு பிறகும், குறள் பாக்கள் மக்களுக்குப் புரியாமலே இருந்துவந்தன. பரிமேலழகர் தன் காலத்தவர்களுக்கு ஏற்ற முறையில் குறள் பாக்களுக்கு உரை எழுதினுர். ஆனல், எதிர் காலச் சந்ததிக்கு விளங்கும் வகையில் இக்கால உரை ஆசிரியர்கள் விளக்கம் தந்திருக்கிருர்கள்.

இன்று திருக்குறள் முழுமையாகவும் பகுதிகளாகவும் ஆசிய ஐரோப்பிய மொழிகளிற் பெயர்க்கப்பட்டுள்ளன. குறளை மொழிபெயர்க்கும் பணி ரஷ்யாவிலும் இன்று ஆரம்ப

(8ம் பக்கம் பார்க்க)

# சமய குரவரும் விஞ்ஞான நுட்பங்களைக் கண்டனர்

யாழ்ப்பாணம், வியாழன்

"மணிவாசகர் அருளிய திருவாசகம், திருக்கோவையார் ஆகியவை சமய அறிவு நுட்பங்களை மாத்திரமல்ல இலக்கியச் சிறப்புக்களையும் எடுத்துக் காட்டிமக்கள் யாவரையும் நல்வழிப்படுத்தக் கூடியதாய் அமைந்திருக்கின்றது."

இவ்வாறு வண்ணை நாவலர் வித்தியாசாலையில் இந்து மாணவர் கழகத்தின் சார்பில் நடைபெற்ற மாணிக்கவாசகர் குருபூசை வைபவத்தில் பேசிய ஆசிரியர் திரு. சி. சிவரத்தினம் குறிப்பிட்டார்.

இக் கூட்டத்திற்கு ஆசிரியர் திரு. சி. முத்துத்தம்பி தலைமை வகித்தார்.

கந்தர்மடம் வித்தியாசாலை ஆசிரியர் திரு. சி குலரத்தினம் பேசுகையில், இக்கால விஞ்ஞான ஆராய்ச்சியாளர் காணும் நுட்பங்களை சமய குரவர் தமது சமய ஆராய்ச்சியில் கண்டிருக்கின்றனர் என்ருர்.

திரு. கா. கிருஷ்ணசாமிஐயர் பேசுகையில்: மாணவர் சமய அறிவைப்பெற்று நன்மைபெற வேண்டும் என்ருர்.

பாடசாலை மாணவர்களான செல்வன் சி. கந்தவேல், நா. சிவபாதசுந்தரம், செல்விகள்: சி. தங்கம்மா, தி. தியாகேஸ்வரி ஆகியோரும் பேசினர்.

## ஐயாறன் எழுதுவது

காய்கறி மார்க்கெட் விலைவாசிகளைப் படித்தேன். இப்போது விலைகளெல்லாம் உச்சாணிக் கொம்பில் ஏறியுள்ளன. கொழும்பில் கூட விலைகள் தேவலாம். யாழ்ப்பாணத்தில் அதிகமாகவுள்ளது.

ஆனல் கவலைப்பட வேண்டாம். காய்கறி விலையைக் குறைக்க தற்காலிக விவசாய மந்திரி முடியான்ஸே தென்னக்கூன் ஒரு வழி காட்டியுள்ளார். அவரது கந்தோர் மூன்ருவது மச்சின் மீதுள்ளது. அங்கு அழகுக்காக சில புஷ்பத் தொட்டிகளை வைத்திருந்தனர். அவற்றை மந்திரி அகற்றிவிட்டு காய்கறிச் செடிகளை நட்டிருக்கிருராம். கத்தரி, மிளகாய்ச் செடிகளை, இரு எம். பி.க்களுடன் சேர்ந்து அவர் புஷ்பத் தொட்டிகளில் நாட்டும் படத்தைப் பார்த்தேன். அதில் எவ்வளவு கத்தரிக்காயும், மிளகாயும் காய்க்குமென்பது இனித்தான் தெரிய வேண்டும்!

மந்திரி மூன்ருவது மச்சின் மீது காய்கறித் தோட்டம் போட்டு வழிகாட்டுகையில், இங்கு நாம் எல்லாரும், கொல்லையிலே காய்கறிகளை அதிகமாகப் பயிரிட்டால், காய்கறிகள் அதிகம் விளைந்து, விலையும் குறைந்துவிடக் கூடுமல்லவா?

பொன் விளையும் பூமியான யாழ்ப்பாணத்தில் ஒரு அங்குல நிலத்தையும் வீணுக்கலாமா?

* * *

குதிரைப் பந்தய விவரங்களைப் பத்திரிகைகளுக்கோ வெளியாருக்கோ கொடுக்க இலங்கை குதிரைப் பந்தயச் சங்கத்தார் மறுத்துவிட்டார்களாம். இனி இலங்கைப் பத்திரிகைகளில் குதிரைப் பந்தயங்களைப் பற்றிய செய்திகளே சட்டப்படி வெளியிட முடியாது. வெளியாரும் அச்சிட்டு துண்டுப் பிரசுரமாக விற்கவும் முடியாது. இதனல் "பக்கெட் ஷாப்" எனும் கள்ளப் பந்தயக் கடைகள் ஒழிந்துவிடுமென்றும், கள்ளப் பந்தய பிரபுக்களுக்கு இது பெரிய இடி என்றும் ஒரு பத்திரிகை எழுதுகிறது.

குதிரைப் பந்தயக் கடைகளை வைக்கப்படாதென்றும், பந்தயம் கட்டுவோர் குதிரைப் பந்தயத்திடலுக்கே நேரில் சென்று கட்டவேண்டுமென்றும் சட்டம் செய்தனர். ஆனல் சட்டம் ஏட்டளவில் தான். பந்தயக்கடைகள் கள்ளத்தனமாக நடந்துவந்தன. இப்போது பிரசுரங்களுக்கு தடைபோட்டாலும், இந்த 'பிஸினெஸ்' நிற்குமென்றுநான் கருதவில்லை. துண்டுப்பிரசுரங்கள் பகிரங்கமாக வெளியாவதற்குப்பதில்கள்ளத்தனமாக வெளியிடப்படலாம்! மக்கள் தங்களைத் தாங்களே தான் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். வெறும் சட்டங்கள் காப்பாற்ற முடியாது.

* * *

யாழ்ப்பாண வர்த்தக அன்பர் எழுதுவதாவது:-

சென்ற 10-ந் திகதி நான் வாழ்க்கைச்செலவு அதிகரிக்கும் காரணத்தைப்பற்றி தங்கள் மூலம் எழுதியிருந்தேன். அரசாங்கம் அதைக்கவனத்துக்குக் கொண்டதினல் அந்தர் ரூ. 110 விற்றபுளி, ரூ. 80 க்குக் குறைந்துவிட்டது. அத்துடன் இந்தியாவில் இருந்துவர லைசன்ஸும் வழங்கப்பட்டது. நீங்கள் வியாபாரிகளுக்குச் செய்யும் சேவையைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

# தென்னுபிரிக்காவில் இந்தியர் நடத்தப்படும் விதம்

## பேச்சுவார்த்தை நடத்த இந்தியா மீண்டும் கடிதம்

நியூயோர்க், ஜூன் 21

'தென்னுபிரிக்காவில் இந்திய இனத்தவர் நடத்தப்படும்விதம் பற்றி விவாதிக்கத் தயாராய் இருப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது.' ஐ. நா.விலுள்ள இந்தியப் பிரதிநிதி திரு. ஸி. எஸ். ஜா, அங்குள்ள தென்னுபிரிக்க தற்காலிகப் பிரதிநிதிக்கு இவ்வாறு எழுதியுள்ளார்.

இதேபோல் பாகிஸ்தான் பிரதிநிதியும் கடிதம் எழுதியிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது. நியூயோர்க்கிலோ அல்லது தென்னுபிரிக்காவுக்கு விருப்பமான வேறிடத்திலோ இது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தலாம் என இரு நாடுகளும் தெரிவித்துள்ளன. ஐ. நா.வில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தைத் தொடர்ந்து, மீண்டும் இந்நாடுகள் பேச்சுவார்த்தைக்கு வருமாறு தென்னுபிரிக்காவை அழைத்துள்ளன.

## பெற்ற குழந்தையை நஞ்சூட்டிக் கொன்றுர் தந்தை

அலவா, புதன்

பிரேமாவதி என்னும் பத்து மாதக் குழந்தையும் அதன் சகோதரியான சோமாவதி என்னும் பதினெட்டு மாதக் குழந்தையும் அலவாவிலுள்ள இனன்கபோலா என்னுமிடத்திலுள்ள அவர்களது வீட்டில் நஞ்சூட்டப்பட்டுக் காணப்பட்டு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது ஆஸ்பத்திரியில் பிரேமாவதி இறந்தாள்.

சோமாவதி ஆஸ்பத்திரியிலிருக்கிறுள்.

இக்குழந்தைகளின் தந்தையான கிரின்டுவையா அலிஸ் சமரா என்பவரே இவர்களுக்கு நஞ்சு ஊட்டித் தாமும் நஞ்சு உட்கொண்டதாகப் பொலிசாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

தனக்கும் நஞ்சு ஊட்டத் தமது கணவன் முனைந்ததாகவும் தாம் தப்பி ஓடிச் சென்றதாகவும் குழந்தைகளின் தயார் பொலிஸாருக்குத் தெரிவித்தார்.

கணவனுக்கும் மனைவிக்கும் சண்டை நடந்ததாகவும் இதனுலேயே இச்சம்பவம் நிகழ்ந்ததாகவும் பொலிசார் நம்புகின்றனர். இதுபற்றி பொலிஸார் மேலும் புலன்விசாரணை செய்கின்றனர்.

## சீனுவில் கடும் பஞ்சம்

லண்டன், ஜூன் 21

சீனுவில் 8 மாகாணங்களில் பண்ணை நிலங்கள் சுமார் 320 லட்சம் ஏக்கராவில் உள்ள பயிர்கள் வரட்சியால் வாடியது. இதர 7 மாகாணங்களில் வெள்ளத்தால் பயிர் நாசமாயின. இதனுல் இதுவரைகண்டிராத கடும்பஞ்சம்ஏற்பங்டிருக்கிறது. அதேபோல் திபெத்திலும் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. உணவுப் பொருள்கள் கள்ளத்தனமாக இந்தியாவிலிருந்து கடத்தப்படுகின்றன.

## 3ம் திட்டத்துக்கு ஹாலந்து உதவியளிக்கும்

புதுடில்லி, ஜூன் 21

இந்தியாவின் 3-வது திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஹாலந்து சர்க்கார் பணஉதவி செய்யக்கூடும் என்று விஷயமறிந்த வட்டாரங்களில் கூறப்படுகிறது. இந்தியாவுக்குக் கொடுக்க உத்தேசித்திருக்கும் கடனின் பரிமாணத்தையும் தன்மையையும் பற்றி இன்னும் ஹாலந்து சர்க்கார் முடிவு செய்யவில்லை.

இந்திய சர்க்காரின் பொருளாதார விவகார காரியதரிசி ஸ்ரீஜா சமீபத்தில் ஹாலந்துக்கு விஜயம் செய்திருந்தார். அப்போது ஹாலந்து சர்க்கார் அவரிடம் இந்தியாவின் 3-வது திட்டத்திற்குப் பண உதவி செய்ய உத்தேசித்திருப்பதாகத் தெரிவித்தனராம்.

இந்த உதவியை ஹாலந்து சர்க்கார் இந்தியாவுக்கு உதவி செய்யும் நாடுகளின் குழாத்திற்குச் சம்பந்தமில்லாமல் செய்யும்.

## ரஷ்யாவில் கமலா நடன நிகழ்ச்சி

யாரோஸ்லால், ரஷியா, ஜூன் 21

ரஷ்யாவில் சுற்றுப்பிரயாணம் செய்து வரும் இந்திய நடனக்கோஷ்டியினர் தங்களது முதல் இரு நிகழ்ச்சிகளை யாரோஸ்லாவில் நடத்தினர். மாஸ்கோவுக்கு வடகிழக்கேயுள்ள பழங்கால ரஷ்ய நகர் யாரோஸ்லால். பிரபல இந்திய நாட்டிய நடிகையான கமலா, அவரது இரு சகோதரிகள் ராதா, வசந்தி ஆகியோர் சபையினரை பெரிதும் கவர்ந்தனர் என்று டாஸ் குறிப்பிட்டது. பரத நாட்டியம், கதகளி நிகழ்ச்சியில் இடம்பெற்றிருந்தனவாம். இக்கோஷ்டியினர் நாளை மாஸ்கோ செல்வதாக டாஸ் குறிப்பிட்டது.

## கோவா விடுதலைக்கு ரஷ்யா ஆதரவளிக்கும்

### அங்கோலாவில் புது படைகள் இறங்கியுள்ளன

மாஸ்கோ, ஜூன் 21

கோவாவிலும், இதர போர்த்துக்கேய காலனிகளிலும் நடைபெறும் விடுதலைப் போராட்டத்துக்கு ரஷ்யா ஆதரவளிக்கும் என இங்கு நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் தெரிவிக்கப்பட்டது. கோவா விடுதலை விஷயத்தில் இந்தியாவுக்கு ரஷ்யா பூரண ஆதரவளிக்கும் எனக்கூறப்பட்டது.

வடஅங்கோலாவில் போர்த்துக்கலிலிருந்து வந்த புதிய படைகள் கரை இறங்கியுள்ளன. அதேசமயம் தேசியவாதிகளின் தாக்குதல் உக்கிரமடைந்திருக்கிறது. யந்திரத் துப்பாக்கிகள் சகிதம் தேசியவாதிகள் தாக்குதல் நடத்தியதாய் அறிவிக்கப்படுகிறது.

படித்த ஆபிரிக்கர் பலர் கைதுசெய்யப்பட்டதாயும் மற்றும் பலர் விசாரணையின்றிச் சுட்டுத்தள்ளப்பட்டதாயும் அறிவிக்கப்படுகிறது.

---

## ஐ. நா. காரியாலயம்

### இந்தியர்கள் அதிக அளவு இடம்பெறுவர்

நியூயார்க், ஜூன் 21

ஐ. நா. காரியாலய உத்தியோகங்கள் சம்பந்தமான சிபார்சுகள் அமுலாக்கப்பட்டால், இந்தியாவுக்கும, கம்யூனிஸ்ட் சீனுவுக்கும் (சீனு அனுமதிக்கப்பட்டால்) அதிகபட்ச நிர்வாகச் செல்வாக்கு ஐ நா.வில் ஏற்படும். இச்சிபார்சுகள் தற்போது ஐ நா. பிரதிநிதிகளின் வசம்உள்ளன.

சிபார்சுகளடங்கிய அறிக்கை இன்னமும் ரகசியமாகவே உள்ளது. ஐ. நா. காரியாலயத்தில் உத்தியோகங்களுக்கு அங்கத்தினர்களின் பொருளாதார பலத்தை அளவுகோலாகக் கொள்ளாமல் ஜனத்தொகையை அளவுகோலாகக்கொண்டு நபர்களை நியமிக்க வேண்டும் என்று சிபார்சுசெய்யப்பட்டுள்ளதாக அறிக்கையின் முக்கிய பகுதிகளைப் பார்த்த விஷயமறிந்தோர் கூறினர்.

பிரான்ஸைச் சேர்ந்த ஹார் ஜஸ்பிகோட் தலைமையில் 8 நிபுணர்கள் கொண்ட கமிட்டி அநேக வாரங்கள் விவாதித்த பின்னர், அறிக்கையைத் தயாரித்துள்ளது. அறிக்கை இவ்வாரம் பிற்பகுதியில் தவளியிடப்படலாம்.

உலகில் சீனுவுக்கு அடுத்தபடியாக அதிக ஜனத்தொகையுள்ள நாடு இந்தியா. எனவே ஐ. நா. காரியாலயத்தில் மிகவும் அதிகபட்சமாக இந்தியர்கள் இடம்பெறுவர்.

## தென்னுப்பிரிக்க நகரில் இந்திய லக்ஷாதிபதி அவதி

போர்ட்எலிஸபத் ஜூன் 21

தமது இனம் காரணமாக, போர்ட்எலிஸபெத்தில் ஹோட்டல் வசதி பெறமுடியவில்லை என்று பம்பாயிலிருந்து சென்ற இந்திய லக்ஷாதிபதி யொருவர் இன்று இங்கு கூறினர்.

பம்பாயில் தலைமைக் காரியாலயத்தைக் கொண்டிருக்கும் பெரிய வர்த்தக ஸ்தாபனம் ஒன்றின் தலைவரான ஸ்ரீ எல். கே. செல்லாரம் குறிப்பிட்டதாவது:- இதுவரை நான் விஜயம் செய்த மூன்று தென்னுப்பிரிக்க நகரங்களில் போர்ட் எலிஸபெத்தில் மட்டும் தான் எனக்கு இவ்வித சங்கடம் ஏற்பட்டுள்ளது. ஜோகன்னஸ்பார்க்கிலும்,டர்பனிலும் பெரிய பிரபல ஹோட்டல்களில் தங்கினேன். ஆனுல் டர்பனை விட்டு புறப்படுமுன் போர்ட் எலிஸபெத்தில் எனக்காக ஹோட்டல் வசதி பெற மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை."

## 'ஆபிரிக்க பிரச்சினை மீது அக்கறைசெலுத்தவேண்டும்'

### காமன்வெல்த் பிரஸ் யூனியனில் ஸ்ரீமதி பண்டிட் பேச்சு

லண்டன், ஜூன் 21

51வது காமன்வெலத் பிரஸ் யூனியன் மகாநாட்டின் துவக்கக் கூட்டத்தை இந்திய ஹைகமிஷனர் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட்டும், பாகிஸ்தான் ஹைகமிஷனர் ஜெனரல் மகமது யூஸுப்பும் இன்று இங்கு ஆரம்பித்துவைத்தனர்.

இந்தியாவில் சாதாரண மக்களின் நலனை அபிவிருத்தி செய்யும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். அதற்கு ஜனநாயக முறையை மேற்கொண்டிருக்கிறோம் என்று ஸ்ரீமதி பண்டிட் கூறினர். அவர் மேலும் கூறியதாவது:—

அபிவிருத்தியடைந்த சமூகம் தான் அபிப்பிராய சுதந்திரத்தை அனுபவிக்கமுடியும் என்ற கொள்கையை நாங்கள் ஏற்கவில்லை. தேசவளர்ச்சியில் அத்தியாவசிய அம்சம் என்று அதை நாம் கருதுகிறோம்.

சுதந்திரத்துக்குப் பிறகு உஷாராகச் செயலாற்றும் பத்திரிகைகள் என் நாட்டுக்கு நன்கு உதவியிருககின்றன.

வானவெளி யுகம் உதயமாகியிருக்கிறது. மனிதனின் கண்களும், அபிலாஷைகளும் இந்தச் சிறிய கிரகத்திலிருந்து திரும்பியிருக்கின்றன. ஆனுல் நம் காலத்தின் பெரும் சவால்கள் பூமியிலேயே இருக்கின்றன; வானவெளியிலோ அல்லது வான மண்டலத்திலோ இல்லையென்று நினைக்கிறேன். அவ்வாறே பலரும் கருதுவது நிச்சயம்.

ஆபிரிக்கக் கண்டத்தில் ஏற்படும் விழிப்புடன் ஒப்பிடும்போது கிரகங்களும் முக்கியமற்றதாகத்தோன்றுகின்றன. அதன் மீது அனைவரும் அக்கறைசெலுத்த வேண்டும்.

வேறு பிரச்சினைகளும் தீர்க்கப்படாமலிருக்கின்றன. மனித உறவு, செல்வத்தை அடைவது வினியோகிப்பது ஆகிய பிரச்சினைகள் உள்ளன. எல்லாவற்றுக்கும் மேலாக நட்புறவு, ஒத்துழைப்பு முறையை உருவாக்கும் பிரச்சினை உள்ளது.

இவைகளை நாம் நன்கு சமாளித்தபிறகு சந்திரனுக்கு உல்லாசப் பிரயாணம் செய்வது பற்றி திட்டமிடுவோம்!

அதுவரை பூமியிலிருந்து நம்மை நோக்கியுள்ள முக்கிய பிரச்சினைகள்மீது கவனம் செலுத்துவோம்.

காமன்வெல்த் விவகாரங்கள் பற்றி ஓரளவுக்குப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டபோதிலும் மேலும் வெளியாவது அவசியம்.

## திரு. பி. கே. நேரு

புதுடில்லி, ஜூன் 21

வாஷிங்டனிலுள்ள இந்திய பொருளாதார தூதர் திரு. பி. கே. நேரு புதுடில்லி வந்தார். 200 கோடி டாலர் வெளிநாட்டுக் கடன்பற்றி அவர் இந்திய அரசாங்கத்துடன் ஆலோசிப்பார். 3 வாரங்களுக்குப்பின் திரு. நேரு வாஷிங்டன் திரும்புவார்.

---

## அனந்தசயனம் ஐயங்கார்

புதுடில்லி, ஜூன் 21

இந்திய லோகசபை சபாநாயகர் திரு. அனந்தசயனம் ஐயங்கார், 3 வாரம் ரஷ்யாவில் சுற்றுப்பிரயாணம் செய்தபின் இன்று புதுடில்லி திரும்பினர்.

---

## மகாராஷ்டிரத்துக்கு ரூ. 515கோடி

பம்பாய் ஜூன் 21

3-ம் ஐந்தாண்டுத்திட்டத்தில் மகாராஷ்டிரம் ரூ. 515 கோடி செலவழிக்கும்.

## கார்ப்பரேஷன் உத்தியோகஸ்தரின் சம்பளம் பற்றி கமிட்டி ஆராயும்

கொழும்பு, புதன்

நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, அரசாங்கத்திலை நடத்தப்படும் கார்ப்பரேஷனில் கடமையாற்றும் ஊழியர்களின் சம்பளம் மற்றும் நிலைமைபற்றி ஆராய நிரந்தரக் காரியதரிசிகளைக் கொண்ட ஒரு கமிட்டியை நியமிக்க அரசாங்கத்திடம் அனுமதி கோரியுள்ளார்.

இதுபற்றி கமிட்டி ஆராயும் வரை அரசாங்க சேவையிலிருந்து கார்ப்பரேஷனுக்கு மாற்றப்பட்ட உத்தியோகஸ்தர்களுடைய சம்பளம் 150 சதவீதத்துக்கு மேல் உயரக்கூடாது என நிதிமந்திரி அறிவித்துள்ளார்.

ரூ. 1000மும் அதற்குக் கூடுதலாகவும் ஆரம்ப சம்பளமாகப்பெறும் கார்ப்பரேஷன் உத்தியோகஸ்தர்கள் வகிக்கும் பதவிபற்றிய விபரத்தை அறிவிக்குமாறு சகல நிரந்தரக் காரியதரிகளும் கோரப்பட்டுள்ளனர்.

ரூ.1000 ஆரம்ப சம்பளமாகப் பெறும் உத்தியோகம் பற்றிய விபரங்களையும் அப்பதவி வகிப்பவரின் பெயரும் அவ்விதம் சம்பளம் கொடுபட வேண்டிய காரணம் பற்றியும் விபரம் அறிவிக்குமாறு கமிட்டி கோரப்படும்.

இவை தெரிவிக்கப்பட்டபின்னர் சகல அரசாங்க காப்பரேஷன்களில் வேலை செய்பவர்களுக்கும் ஒரே வித சம்பளம் கொடுப்பதுபற்றி அரசாங்கம் தீர்மானிக்கும்.

## 'நேருஜீ மகாபுருஷராக விளங்குகிருர்'

### பிராங்க் மொரேஸ் விமர்சனம்

நியூயார்க், ஜூன் 21

சாமர்த்தியமான அயல்நாட்டுக் கொள்கையை உருவாக்கி நடத்தி வைத்து, இந்தியாவின் மேன்மையை உலகில் நிலைநாட்டிய பெருமை நேருஜியைச் சாரும் என்று "இந்தியன் எக்ஸ்பிரஸ்" ஆசிரியர் ஸ்ரீ பிராங்க் மோரேஸ் "பாரின் அபேர்ஸ்" என்ற சஞ்சிகைக் கட்டுரையொன்றில் கூறியுள்ளார். ஆனுல், உள்நாட்டு விவகாரங்களில் அதே மாதிரி அவரால் வெற்றிகாண இயலவில்லை என்று கூறியுள்ளார் ஸ்ரீ மோரேஸ். இந்தியாவின் ஒருமைப்பாட்டையும் ஸ்திரத்தன்மையையும் உறுதிப்படுத்த அவரால் முடியவில்லை என்று கருதுகிருர் ஸ்ரீ மோரேஸ். இந்த இரண்டு நோக்கங்கள் நிறைவேறுவதற்காக வாழ்நாளெல்லாம் அவர் பாடுபட்டு வந்த போதிலும், அவை கைகூடுவதற்கான நடவடிக்கைகளை உறுதியுடன் மேற்கொள்ளாததுதான் இந்தத் தோல்விக்குக் காரணம் என்பது ஸ்ரீ மோரேஸின் அபிப்பிராயம்.

ராணுவ வல்லரசாகவோ, பொருளாதார வன்மையுள்ளதாகவோ இல்லாதிருந்தும், ஒரு பெரிய தார்மிக சக்தியாக உலகில் இந்தியாவைவிளங்கச் செய்தவர் நேருஜிதான் என்று சொல்லி, அவரது பணிகளை ஸ்ரீ மோரேஸ் போற்றியுள்ளார்.

உள்நாட்டு ராஜ்ய விவகாரங்களில் அவசர உணர்ச்சியுடன், உறுதியாகச் செயலாற்றுமைக்குப் புத்தி பூர்வமான சமாதானங்களை நேருஜி கூறிவந்திருப்பதைச் சுட்டிக்காட்டி, தமக்குப்பின் பொறுப்பேற்கக் கூடியவரைப்பற்றி அவரால் ஒரு முடிவுக்கு வர இயலாமையே இதற்குக் காரணமாக இருக்கலாம் என்று கருதுகிருர் ஸ்ரீ மோரேஸ்.

பதினைன்கு வருஷ காலம் தொடர்ந்து பிரதம மந்திரியாக இருந்து நேருஜி செய்துள்ளவற்றை ஸ்ரீ மோரேஸ் விமரிசனம் செய்து மகாபுருஷராக அவர் விளங்குகிருர் என்று பாராட்டியுள்ளார்.

## படம் பிடித்த பிக்கு

### நூல்களுக்குப் பதில் கமரா வாங்கினர்!

கொழும்பு, புதன்
கலாசார மந்திரி மைத்திரிபால சேனநாயக்காவை ஒரு கூட்டத்தில் புகைப்படம் பிடித்த பிக்குவுக்கு கமரா வாங்குவதற்கு எப்படிப் பணம் கிடைத்தது? கலாசார இலாகா அவருக்கு வழங்கிய உதவி நன்கொடைப்பணத்தில் தான் அவர் அந்தக் கமராவை வாங்கினரா?

இதுபற்றி உடனடியாக விசாரணை நடத்தும்படி கலாசார விவகார மந்திரி மைத்திரிபால சேனநாயக்கா உத்தரவிட்டிருந்தார்.

சென்ற வெள்ளிக்கிழமை கண்டியிலே, யலேகொட என்னுமிடத்தில் ஒரு கூட்டத்தில் கலாசார விவகார மந்திரி மைத்திரிபால சேனநாக்கா பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு பௌத்த பிக்கு தம்மைப் புகைப்படம் எடுத்துக்கொண்டிருப்பதைக் கண்டதும், 'பஸ் வண்டிகளில் தங்களுக்கு மதிப்பளிக்கப்படுவதில்லை யென்று பௌத்த பிக்குகள் புகார்கூறுகிறார்கள். இப்படிப் பத்திரிகைப் படப்பிடிப்பாளர்களாக பௌத்த பிக்குகள் பணியாற்றத் தொடங்கினல் யார்தான் மதிப்புக் கொடுப்பார்கள்?' என்று மந்திரி சேனநாயக்கா குறிப்பிட்டார்.

மந்திரிபேசிமுடிந்ததும் பிரஸ்தாப பௌத்தபிக்கு மந்திரியை அணுகி தமக்கு கலாசார இலாகாவே அந்தப்புகைப்படக் கருவியைக் கொடுத்ததாகத்தெரிவித்தார்.

இதுபற்றி விசாரணை நடத்தும்படி கலாசார விவகார இலாகாவுக்கு மந்திரி உத்தரவிட்டார்.

விசாரணையிலிருந்து, கலாசார விவகார இலாகா நூல்கள் வாங்குவதற்காகப் பணம் கொடுத்ததேயன்றி கமராவாங்குவதற்குப் பணம் கொடுக்கவில்லையென்று தெரியவந்தது.

1,200 ரூபாய் பெறுமதியான அந்தக் கமராவை திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று கலாசார இலாகாவுக்கு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

கலாசார இலாகா நடத்திய விசாரணையிலிருந்து பிரஸ்தாப பிக்கு பத்திரிகைக்குச் செய்தியனுப்பும் நிருபராகவும் கடமையாற்றிவந்திருக்கிருரென்று தெரியவந்தது.

கலாசார இலாகாவினல் வழங்கப்படும் நன்கொடைப் பணம் சரியான முறையில் உபயோகிக்கப்படுகிறதாவென்பதுபற்றி சரியான முறையில் கவனிக்கவேண்டுமென்று கலாசார விவகார இலாகாவுக்கு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

## கசிப்பை ஒழிக்க கள்ளு?

கொழும்பு, புதன்
கள்ளத்தனமாக உற்பத்தி செய்யப்படும் 'கசிப்பு' என்னும் குடிவகையை ஒழிப்பதற்காக கள்ளிறக்குவதற்கான புதிய அனுமதித் திட்டமொன்றைக் கொண்டுவர அரசாங்கம் ஆலோசித்துவருகிறது.

இத்திட்டத்தின்படி, தனிப்பட்டவர்கள், தங்கள் காணிகளில் இருக்கும் கித்துள், தென்னைமரங்களில், தங்கள் சொந்தத் தேவைக்குவேண்டிய கள்ளை பர்மிட் பெற்று இறக்கலாம். இதனல் மக்களுக்கு வேண்டிய கள்ளு மலிவாகவும், சுத்தமாகவும் கிடைக்கலாம் என்று அரசாங்கம் நம்புகிறது.

## வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7, பகல் 12-45, மாலை 6, இரவு 9)

**வியாழன் 22-6-61**

காலை 6-45 உதயகீதம் 6-50 சைவநற்சிந்தனை 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை 7-15 தேர்ந்த இசை 7-30 திரை இசை 8-00 கோட்டு வாத்தியம் 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள் 5-15 ஒலிப்பதிவுகள் 5-45 திரை இசை 6-15 கிராம சஞ்சிகை 6-45 கிளாரினட்.

இரவு 7-00 மோகனம்பிகை கணேசன்—பாட்டு 7-45 நேயர் விருப்பம் 8-15 'வாழ்கைத் திரை'—தொடர்நாடகம் 8-30 வாத்தியக்கோஷ்டி 8-45 இஸ்லாமிய கீதங்கள் 9-15 இஸ்லாமிய நிகழ்ச்சி 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்)

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15' பகல் 2, இரவு 7-15)

காலை 7-00 இசைக்கதிர் 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள் 7-30 என். வி. ருக்மணி—பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு 1-00 இசைக்கோவை 1-10 என்.வி.ருக்மணி—பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்) 5-45 இசைப்பயிற்சி 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-45 எம்.ஏ. கல்யாணகிருஷ்ணபாகவதர் ராகம், தானம், பல்லவி 8-30 டெல்லி அஞ்சல் 8-40 திரைப்பட இசை 9-15 சுபத்த சங்கீதம் 9-30 அகிலபாரத இசை நாடகம்.

## சரவணை—நாரந்தனை கந்தசாமிகோவில்

ஊர்காவற்றுறை, புதன்
சரவணை-நாரந்தனை ஸ்ரீகந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவங்கள் நேற்று ஆரம்பமாயின. இம்மாதம் 28-ந் தேதி நடைபெறும் தேர்த் திருவிழாவுடன் உற்சவங்கள் முடிவடையும்.

## வான் சேவை வேண்டும்

### பட்டின சங்கம் தீர்மானம்

ஊர்காவற்றுறை, புதன்
"திருப்திகரமான பஸ்சேவை அமுலாக்கும் வரை தனிப்பட்ட வான் சேவையைத் தடைசெய்யவேண்டாம்" என அரசினரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் சென்ற சனிக்கிழமை நடைபெற்ற ஊர்காவற்றுறைப் பட்டினசங்கக் கூட்டத்தில் ஏகமனதாகத் நிறைவேற்றப்பட்டது.

நாலாம் வட்டார அங்கத்தவர் திரு பி. இம்மனுவேல் இத்தீர்மானத்தைப் பிரேரித்துப் பேசுகையில் பிரயாணிகளின் போக்குவரத்து வசதிகளைச் சமாளிக்கப் போக்குவரத்து சபையால் முடியாத நிலையில் வான்சேவையைத் தடை செய்வது நியாயமற்றதெனக் குறிப்பிட்டார். இத்தீர்மானத்தை திரு. எவ். எஸ். தம்பு ஆதரித்துப் பேசினர்.

அயித்தாம்பலம் றோட்டுக்கு போடப்பட்ட கல் தரம் குறைந்தது என திரு. பி. இம்மனுவேல் இக்கூட்டத்தில் புகார் செய்தார்.

## கோயில் காணிகளை நிர்வகிக்க கமிஷனர்?

கொழும்பு, ஜூன் 21
இலங்கையிலுள்ள எல்லாக் கோயில்களுக்கும் சொந்தமான காணிகளைக் கண்காணிப்பதற்காக ஒரு கமிஷனரை நியமிப்பது பற்றி கைத்தொழில் வீடமைப்பு கலாச்சார மந்திரி ஆராய்வதாகத் தெரிகிறது.

கோயில் சொத்துக்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தையும் பராமரிப்புச் செலவுகளையும் அந்த அதிகாரி பொறுப்பேற்று நடத்தலாமென்றும் தெரிகிறது.

கோயில்களுக்குரிய காணிகளைக் கண்காணிக்க உபயகாரர் சபை நிறுவப்படும். அதில் கமிஷனரின் பிரதிநிதி ஒருவரும் அங்கம் வகிப்பார். புத்தசாசனக் கமிஷன் கூறிய யோசனைகளில் மேற்கூறிய விஷயமும் இடம்பெற்றுள்ளது


# ஒரு கரண்டிபாலின் தரத்தை எந்தத் தேநீரும் மீறமுடியாது



## இலங்கை தேநீரை அறியும்!




இலங்கை தேநீரை அறியும்! இது "மில்க்மெயிட்"டையும் அறியும்—இந்தச் சிறந்த பால் தேநீர் பருகுவதில் இன்பத்தையும் அதி[illegible]க்கும். உங்களுக்குச் சிறந்த—மிகவும் சுத்தமான பால் என[illegible]தெரிவு செய்யப்பட்டு நெஸில்ஸ் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்டது. [illegible] மிகவும் சிறந்த ரகமும் பணத்துக்கேற்ற நிறைந்த பெறுமதியும் கொண்டது. எப்பொழுதும் "மில்க்மெயிட்"பாலையே கேட்டுவாங்குங்கள்.

தேனீர் தயாரிப்பதற்கான ஐந்து பொன்னான விதிகள்:



* பக்கெட்டில் அடைக்கப்பட்ட திறமான தேயிலை
* உஷ்ண தேநீர்ப் பானை
* ஒருவருக்கு ஒரு கரண்டிப் பால். பானைக்கு ஒன்று
* சுத்தமாக கொதித்த வெந்நீர்
* 3-4 நிமிடங்களுக்கு ஊற விடுதல்.

ஆனால்: "மில்க்மெயிட்"பாலை எப்போதும் மறவாதீர்கள்.

# "மில்க்மெயிட் பால்"—சிறந்த பால்

# மனைவி குழந்தைகளுக்கு விசா வரி விலக்கு?

## அரசாங்கம் பரிசீலனை

கொழும்பு, புதன்

இலங்கையில் விசாவில் தங்கி வேலைபார்ப்பவர்களது மனைவிமாருக்கும் குழந்தைகளுக்கும் விசா வரியிலிருந்து விலக்களிப்பதுபற்றி அரசாங்கம் பரிசீலனைசெய்துவருகிறது.

இப்பொழுது நிறைவேற்றப்பட்டுள்ள சட்டத்தின்படி விசாவில் தங்கியிருப்பவர்கள், வேலை பார்ப்பவர்களானாலும் வேலை பார்க்காதவர்களாக இருந்தாலும்சரி வருடத்துக்கு 400 ரூபாய் விசாவரி செலுத்த வேண்டும்.

புதிய திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் இலங்கையில் விசாவில் தங்கியிருந்து வேலை பார்ப்பவர்கள்மட்டுமே விசா வரி செலுத்தவேண்டி வரும்.

வேலை பார்க்காமல் இலங்கையில் விசாவில் தங்கியிருப்பவர்கள் இந்த விசாவரி காரணமாகப் பெரும் வசதியீனங்களுக்குட்பட்டிருப்பதாக சமீபத்தில் தூதுக்கோஷ்டி ஒன்று அரசாங்கத்திடம் முறையிட்டது.

சில குடும்பங்கள் தங்கள் உழைப்பில் பெரும்பகுதியை 400 ரூபாய் விசா வரியாகச் செலுத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதென்று அரசாங்கத்துக்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

கணவனுடன் தங்கியிருக்கும் மனைவிக்கும் பெற்றோருடன் தங்கியிருக்கும் பிள்ளைகளுக்கும் விசாவரியிலிருந்து விலக்களிக்கவேண்டுமென்று இந்திய வர்த்தகர்சபை அரசாங்கத்திடம் கோரியிருக்கிறது.

இலங்கையில் விசாவில் தங்கியிருப்பவர்களெல்லோரும் இவ்வருடம் ஜூலை 8-ந் திகதிக்கு முன்னர் விசாவரிசெலுத்த வேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளனர்.

## மாணவியைக் காணவில்லை!

யாழ்ப்பாணம், வியாழன்

திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் கரம்பனைச் சேர்ந்த ஐயாத்துரை மகள் மனோகரா என்ற 13 வயது மாணவி திடீரெனப் பாடசாலையிலிருந்து காணமற் போய்விட்டாரென அறியப்படுகிறது. இதுபற்றி இம்மாணவியின் தாயார் கோப்பாய்ப் பொலிசில் புகார் செய்ததன் பேரில் பொலிசார் இவரைத் தேடிவருகின்றனர்.

முத்துத்தம்பி வித்தியாசாலை விடுதிச்சாலையில் தங்கியிருந்த இம்மாணவி கடந்த மாதம் 28-ம் திகதியிலிருந்து காணமற் போய்விட்டாரெனப் புகார் செய்யப்பட்டுள்ளது. இது பற்றி இதுவரையில் எதுவித தகவலும் கிடைக்கவில்லை.

சுமாரான உயரமும் அழகிய தோற்றமுமுடைய இம்மாணவி வகுப்பில் படிப்பில் திறமையானவரென்று கூறப்படுகிறது.

## டாக்டர் சில்வா கொழும்பு திரும்பினர்

கொழும்பு, புதன்

மாஸ்கோவில் நடைபெற்ற மேதின விழாவில் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொரளைத் தொகுதி எம். பி. டாக்டர் டபிள்யு. டி. டி. சில்வா இன்று கொழும்பு திரும்பினர்.

மாஸ்கோவிலிருந்து டாக்டர் சில்வா, மக்கள் சீனக்குடியரசுக்கும் பர்மாவுக்கும் விஜயம் செய்தார்.

## காலித் துறைமுகம் தேசியமயமாக்க கோரிக்கை

காலி, செவ்வாய்

"காலித்துறைமுகம் தேசியமயமாக்கப்பட வேண்டும்" என்னும் ஓர் தீர்மானம் காலித் துறைமுகத் தொழிலாளர் சென்ற ஞாயிற்றுக் கிழமை காலி எம். பி. திரு. டபிள்யு. தகநாயக்கா தலைமையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் நிறைவேற்றினர்.

காலித் துறைமுக அபிவிருத்தி வேலைகளை தனிப்பட்ட ஒரு 'கண்ட்ராக்டரிடம்' ஒப்படைக்கும் அரசாங்கத்தின் யோசனைக்கு தொழிலாளர் கண்டனம் தெரிவித்தனர்.

உடனடியாக மீண்டும் உணவுக் கப்பல்களைக் காலித் துறைமுகத்துக்கு அனுப்ப வேண்டுமென்று தொழிலாளர் மற்றொரு தீர்மானத்தின் மூலம் கேட்டுக்கொண்டனர்.

உணவுக் கப்பல்கள் காலித் துறைமுகத்துக்கு அனுப்பப்படாததால் 450 தொழிலாளர்கள் வேலையின்றியிருப்பதாகக் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

கூட்டத்தில் மற்றும் பலர் பேசினர்.

# கீழே விழுந்தவரின் தலையில் மொங்கானால் அடித்தார்

## நவாலி கொலைவழக்கில் சிறுமிசாட்சியம்

யாழ்ப்பாணம், வியாழன்

நவாலிதெற்கு கொலைவழக்கு யாழ்ப்பாணம் நீதவான் திரு. அரசுவால்டன் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நவாலி தெற்கைச் சேர்ந்த நவரத்தினம் அரியபுத்திரன் என்பவரைத் தாக்கிக் கொலை செய்ததாக அம்பலவாணர் நவரத்தினம், குணம் என்றழைக்கப்படும் நவரத்தினம் திரு. ஞானசம்பந்தர் ஆகியோர்மீது குற்றம்சாட்டி ஆனைக்கோட்டைப் பொலிசைச் சேர்ந்த உதவி இன்ஸ்பெக்டர் திரு. டி. கந்தையா இவ்வழக்கைத் தொடர்ந்திருந்தார்.

காலஞ்சென்ற அரியபுத்திரன், முதல் எதிரி அம்பலவாணரின் மகன். இரண்டாவது எதிரி திரு. ஞானசம்பந்தர் அவரது சகோதரர்.

எதிரிகளின் சார்பில் திரு. வி. நடராஜாவின் அனுசரணையுடன் திரு. எஸ். வி. கதிரவேலு ஆஜரானர்.

முதல் எதிரி அம்பலவாணர் நவரத்தினத்தின் வேலைக்காரச் சிறுமியான 13 வயது வள்ளியம்மை சாட்சியமளிக்கையில் பின்வருமாறு கூறினர்:-

ஏப்ரல் மாதம் 14ந் திகதி முற்பகல் 11 மணிக்குக் காலஞ்சென்றவரும் முதல் எதிரியும் பசு மாட்டை விற்பது சம்பந்தமாகச் சண்டை போட்டார்கள். அந்தப் பசுமாடு முதல் எதிரிக்குச்சொந்தமானது. முதல் எதிரிதான் காலஞ்சென்றவரையும் அவரது குடும்பத்தையும் பராமரித்துவந்தார். காலஞ்சென்றவர் மதுவருந்திவிட்டு வீட்டுக்கு வருவது வழக்கம். சம்பவம் நடைபெற்ற தினத்தன்று காலஞ்சென்றவர், வீட்டுக்கு வந்து படுக்கையில் படுத்திருந்த முதல் எதிரியைக் கீழே இழுத்துத் தாக்கினர். இரண்டாவது எதிரி இருவரையும் பிரித்துவிட்டார். மீண்டும் முதல் எதிரியும் காலஞ்சென்றவரும் சண்டையிட்டனர். காலஞ்சென்றவர் கீழே விழுந்தார். முதல் எதிரி ஒரு மொங்கானைக் கொண்டுவந்து காலஞ்சென்றவரின் தலையில் அடித்தார்.

மேல் விசாரணை அடுத்த மாதம் 5ந் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

# வெளிநாடுகளில் படிக்கும் இலங்கை மாணவர்களே உஷார்!

## செலவாணி கெடுபிடி

கொழும்பு, புதன்

வெளிநாடுகளில் கல்வி பயிலும் இலங்கை மாணவர்கள் வகுப்புத் தேர்ச்சிகளையும் புள்ளி விவரங்களையும் கொண்ட 1960—61 ம் ஆண்டுத் தேர்ச்சி அறிக்கைகளைச் செலவாணிக் கட்டுப்பாட்டதிகாரிக்கு அனுப்பவேண்டுமாம். அவ்வாறு அனுப்பிவைக்கத் தவறினல் அவர்களுக்குக் கொடுக்கப்படும் செலவாணி பர்மிட் வழங்கப்படல் மாட்டாது என்று செலவாணிக் கட்டுப்பாட்டதிகாரி அறிவித்துள்ளார். புகுமுகப் பரீட்சையில் தேருதவர்களுக்கும், இண்டர் மீடியட் பரீட்சையில் தேருதவர்களுக்கும் இறுதிப்பரீட்சையில் இருமுறை தேறத்தவறியவர்களுக்கும், தேர்ச்சி திருப்தியற்றதாகக் காணப்பட்டாலும் செலவாணி பர்மிட் மறுக்கப்படும் என்ற தமது கடிதத்தில் செலவாணிக் கட்டுப்பாட்டதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

தேர்ச்சியறிக்கையில் மாணவர் தோன்றிய பரீட்சைகளும் பரீட்சை முடிவுகளும் குறிக்கப்படல் வேணடுமாம். மாணவர் பரீட்சைக்குத் தோற்றமளிக்கத் தவறினல், அதற்குக் காரணம் என்ன என்று அறிவித்திருக்க வேண்டும்ம். தோற்றியிருக்க வேண்டிய பரீட்சைத் திகதியும் குறிக்கப்படல் வேண்டுமாம்.

## பொருள்கள் விலையேற்றம் மக்கள் அதிருப்தி

வத்தளை, புதன்

'அத்தியாவசியமான உணவுப் பொருள்களின் விலை உயர்த்தப்பட்டுள்ளதால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அதிகாரத்திற்குக் கொண்டுவர வாக்களித்த ஏழை மக்களிடையே பெரும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது' என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வத்தளைக் கிளையின் மாதாந்தக் கூட்டத்தில் டாக்டர் ஏ. டி. ஜே. எல். லியோ கூறினர்.

அரசாங்க இலாகாக்களில் திறமையற்ற நிர்வாகமிருப்பதும் வருந்தத்தக்க ஒரு செயலாகுமென்றும் டாக்டர் லியோ குறிப்பிட்டார்.

## ஆனிஉத்தர விழா

நீர்வேலி, வியாழன்

நீர்வேலி கந்தசாமி கோயில் ஆனிஉத்தர விழா சென்ற செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. ஆசிரியர் திரு பொன்னம்பலம் 'கந்தனை அழைத்த கவி' என்னும் பொருள் பற்றி சங்கீத உபந்நியாசம் நிகழ்த்தினர்.

நீர்வேலி கந்தசாமி கோயிலில் மாணிக்கவாசகர் குருபூசை தினத்தன்று விசேஷ பூசையும், கூட்டுப்பிரார்த்தனையும் நடைபெற்றன.


தாயும் மகளும் நவ நாகரீகமாகத் திகழ உகந்தது ஜம்பிங் பிஷ் பிரிண்டட் பேப்ரிக்

தாயும் மகளும் நவநாகரீகமாக உடுத்துவதற்கு இந்தப் புதிய பேப்ரிக்குகளை நிச்சயம் நீங்கள் தேர்ந்தெடுப்பீர்கள். இந்த அச்சடி கேம்பிரிக்குகள் பிரகாசமானவை, கனமில்லாதவை, நீடிய காலம் உழைப்பவை. குறைந்த விலையில் கிடைப்பவை. பல கலர்களிலும், பல்வேறு டிசைன்களிலும் கிடைப்பவை. இன்றே ஜம்பிங் பிஷ் பேப்ரிக்குகளில் நீங்களும் தைத்து உடுத்துங்கள் —இது சிக்கன வாழ்விற்கு ஸி. டப்ளியூ. ஈ. அளிக்கும் அன்பளிப்பு.



ஏக விநியோகஸ்தர்கள்:
சி. டப்ளியூ ஈ
கிடைக்குமிடங்கள்: சி. டப்ளியூ, ஈ. இலாகா, ஸ்டோர், கோட்டை, கொழும்பு மக்கலம் ரோட், மெயின்வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும்- CWE ஸி. டப்ளியூ- ஈ. தரத்திலும் ரகத்திலும் உயர்ந்த பொருட்களையே உங்களுக்கு அளிக்கின்றது

# "விசாரணையின்றி காவலில் வைப்பது ஒழுங்கீனமாகும்"

## செனட்சபையில் திரு. நடேசன் பேச்சு

கொழும்பு, புதன்

"அவசரகாலச் சட்டத்தின்மூலம் ஆட்சி செய்யப்போகிறதா? இல்லையா? என்பதை அரசாங்கம் முடிவு செய்யவேண்டும். என்ன செய்ய உத்தேசித்துள்ளதென்பதைப்பற்றி அரசாங்கம் தெரிவிக்க வேண்டும்."

இவ்வாறு செனட்டர் எஸ். நடேசன் நேற்று செனட் சபையில் ஒத்திவைப்புப் பிரேரணை மீது பேசுகையில் கூறினார். செனட்டர் நடேசனின் பேச்சு நேற்று 'ஈழ நாடு' பத்திரிகையில் சுருக்கமாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

தலைவர் சேர். சிறில் டிசொய்ஸாவின் தலைமையில் செனட் சபை செவ்வாய்க்கிழமை பிற்பகல் கூடியபொழுது, அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் கவர்னர் ஜெனரலின் செய்தியைத் தலைவர் சபையில் வாசித்துக் காட்டினார்.

சபை ஒத்திவைப்புப் பிரேரணைமீது செனட்டர் நடேசன் பேசுகையில் அவசரகால நிலைமைபற்றிக் குறிப்பிட்டார். அவர் கூறியதாவது:

அவசரகால நிலைமை அமுலிலிருக்கும் சென்ற இரண்டு மாத காலத்திலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பெரும்பாலான பார்லிமெண்ட் பிரதிநிதிகளை அரசாங்கம் தடுப்புக்காவலில் வைத்துள்ளதுடன் மற்றும் பலரையும் கைதுசெய்து காவலில் வைத்துள்ளது.

தமிழ் எம். பி.க்கள் உட்பட 72 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். விசாரணையின்றி எவரையும் காவலில் வைத்திருப்பது ஒழுங்கீனமும் ஜனநாயகத்துக்கு மாறானதுமாகும்.

எட்டு, ஒன்பது பேர் மட்டும்தான் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர். மற்றவர்கள் விசாரணையெதுவுமின்றிக் காவலில் உள்ளனர்.

இயக்கத்தை ஆரம்பித்த தமிழரசுக்கட்சித் தலைவர்கள் தொடர்ந்து தடுப்புக்காவலில் வைத்திருக்கப்பட வேண்டுமா என்றும் அதேசமயம் மற்றவர்களும்தொடர்ந்து காவலில்வைக்கப்பட்டிருக்க அரசாங்கம் கருதுகிறதாவென்பதுபற்றியும் அங்கத்தவர்கள்தான் தீர்மானிக்கவேண்டும்.

அவசரகாலச் சட்டத்தைத் தொடர்ந்து அமுலில் வைத்திருக்கவேண்டியது அவசியமென்று அரசாங்கம் கருதினால் எம். பி.க்களல்லாத மற்றவர்களை இன்னும் ஏன் தொடர்ந்து காவலில் வைத்திருக்க வேண்டுமென்பதைத் திட்டவட்டமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

### நோக்கத்துக்காக உபயோகிக்கவில்லை

எந்த நோக்கத்துக்காக அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப்பட்டதோ அந்த நோக்கத்துக்கு அல்லாத விஷயங்களுக்கு அவசரகால நிலைமை உபயோகப்படுத்தப்படுகிறது.

கள்ளக் கடத்தல்காரர்கள் என்று பொலிஸார் சந்தேகம் கொண்டகாரணத்துக்காக வல்வெட்டித்துறையில் 28 பேர் கைதுசெய்யப்பட்டு அனுராதபுரம் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைதுசெய்து அனுராதபுரம் சிறையில் வைக்கப்பட்டுள்ளவர்களில் ஒருவர் வல்வெட்டித்துறைப் பட்டினசபையின் தலைவர். தென்னிந்தியாவிலிருந்து ஆயுதங்கள் கடத்துவதாக இவர்மீது சந்தேகங்கொண்டதுதான் இவர் கைது செய்யப்பட்டதற்குக் காரணம்.

ஆயுதங்கள் கடத்தப்படுவது உண்மைதானா? என்று சிநேக நாடு ஒன்றிடமிருந்து அறிந்துகொள்வது ஒன்றும் பெரிய கஷ்டமான காரியமல்ல. இந்தியா வெங்காயம் உற்பத்தி செய்யக்கூடும்; வேறு நாட்டுக்கு அனுப்புவதற்கு ஆயுதங்கள் உற்பத்தி செய்யுமென்று கூறமுடியாது.

வடபகுதியில் தரைப்படை, கடற்படை, பொலிஸ்படை ஆகியவைகளிருப்பதால் கள்ளக்கடத்தலைச் சுலபமாகத் தடுத்திருக்கலாம். இதற்கு மாறாக சந்தேகங்கொள்பவர்களெல்லோரையும் பிடித்துச் சிறையிலடைத்துள்ளனர்.

ஜூன் 15ம் திகதியிலிருந்து இந்த இராணுவத்தினர் சட்டவிரோதக்குடியேற்றக்காரரைக் கண்காணிப்பதாகக் கூறிக்கொண்டு மன்னார்ப்பகுதி மக்கள்மீது கடுமையாகத் தாக்கத் தொடங்கினார்கள்.

1954ல் பேசாலையிலுள்ள மக்களுக்கு அடையாளச் சீட்டுகள் வழங்கப்பட்டிருந்தன. ஆனால், ஜூன் 15ம் திகதிக்குப் பின்னர் சகல மக்களும் கடுமையாகத் தாக்கப்பட்டனர். இவ்வித பயங்கரத் தாக்குதல்களை நிறுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

ஒவ்வொரு இரவும் இராணுவத்தினர் இங்குள்ள குடிசைகளுள் நுழைந்து அங்கு உறங்கிக்கொண்டிருந்த மக்களை உதைகொடுத்து எழுப்பி, பல கேள்விகளைக் கேட்டபின்னர் மன்னார் பொலிஸ் ஸ்டேஷனுக்குக் கூட்டிச் சென்றனர்.

சிலர் விடுதலைசெய்யப்பட்டனர். மற்றவர்கள் 1950ம் ஆண்டுக்குப்பின்னர் வந்ததாக அச்சிடப்பட்டு இருந்த ஒரு பத்திரத்தில் கையொப்பமிடும் வரை அடிக்கப்பட்டனர். இந்தப் பத்திரத்தில் கையொப்பமிட்டவர்கள் நாடு கடத்துவதற்காக கொழும்புக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

இதற்கிடையில் அவர்களது உடைமைகள் பறிக்கப்பட்டன. சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுக்க எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இராணுவத்தினர் வீடுகளில் புகுவதற்கும் எதுவித காரணமுமில்லை.

இவ்விதம் சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் என்று கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டவர்களில் 30 பேர் வடக்கில் பலகாலமாக வாழ்ந்து வந்தவர்கள். மிருகத்தனமாக நடந்துகொள்வதால் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என நினைக்கக்கூடாது.

அவசரகாலச் சட்டத்தின் மூலம் நாட்டை ஆளலாமா என்பதுபற்றி அரசாங்கம் தீர்மானிக்க வேண்டும். அரசாங்கம் இனி என்ன செய்யப் போகிறதென்பதுபற்றி அங்கத்தவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

தடுப்புக் காவலில் வைத்திருக்கும் ஒவ்வொருவரையும் அரசாங்கம் விடுதலை செய்யும் காலம் வந்துவிட்டது.

மொழிப்பிரச்சினையைத்தீர்க்க அரசாங்கம் தகுந்தநடவடிக்கை எடுத்து தமிழ் மக்களின் மனக்கசப்பைப் போக்க முயல வேண்டும்.

### காரணங்கள் பற்றியே ஏற்படுத்தப்பட்டன

இதற்குப் பதிலளிக்கையில் செனட்டர் ஏ. பி. ஜயசூரியா கூறியதாவது:

அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்ட காரணமாகவே சம்பந்தப்பட்டவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர்.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பவர்களை விடுதலை செய்தால் எதுவித ஆபத்தும் இருக்காது என்று அரசாங்கம் கருதும்வரை அவரகால நிலைமை நீடிக்கும்.

மொழிச்சட்டத்தை அமுல் நடத்துவதில் அரசாங்கம் உண்மையாக அக்கறை கொண்டுள்ளதாலேயே நாட்டிலுள்ள சில தலைவர்களிடம் இது விஷயமாக ஆராயுமாறு அரசாங்கம் சில கோரிக்கைகளை ஒப்படைத்துள்ளது. மொழிச் சட்டத்தை மீறாமல் அதை அமுல் நடத்த அரசாங்கத்துக்கு ஆலோசனை கூற ஒரு கமிட்டியும் நியமிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் தடுப்புக்காவலில் வைத்திருந்த 16 பேரை ஏற்கனவே விடுதலை செய்துள்ளது. சட்டத்தை மீறுபவர்களின் பிடியிலிருந்து பொதுமக்கள் விலகி இருக்கவே அவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

### ரஷ்யாவுக்கு வழிகாட்ட

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகிவிட்டது. கீழைத்தேச ஆராய்ச்சியாளர்கள் மட்டுமன்றி ரஷ்ய வாசகர்களும் எதிர்காலத்தில் தமிழரின் அற்புதமான இலக்கியச் செல்வமாகிய திருக்குறளைப் படித்து விளங்கிக்கொள்வார்கள்.

## மார்க்கெட் விலை வாசிகள்

### தங்கம், வெள்ளி

யாழ்ப்பாணம், செவ்வாய்

| | ரூ. ச. |
|---|---|
| புடத்தங்கம் | 105 - 00 |
| நகைப்பவுன் | 98 - 00 |
| தங்கப்பவுன் | 101 - 00 |
| அரைத்தங்கப்பவுன் | 55 - 00 |
| மூஸ்வெள்ளி தோலா | 2 - 25 |

### காய் கறி

மார்க்கெட்டிங் இலாகா (யாழ்ப்பாணக்கிளை) இவ்வாரம், சில்லறையாக காய்கறிகளை விற்கும் விலை கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

| | | ரூ—ச |
|---|---|---|
| கோவா | ருத்தல் | 0 - 55 |
| புடலங்காய் | " | 0 - 18 |
| கத்தரிக்காய் | " | 0 - 38 |
| போஞ்சி(பட்டர்) | " | 0 - 65 |
| போஞ்சி(மற்றரகம்) | " | 0 - 65 |
| காரட் | " | 0 - 75 |
| லீக்ஸ் | " | 0 - 55 |
| சாம்பல் வாழைக்காய் | " | 0 - 15 |
| பிஞ்சுமிளகாய் | " | 0 - 60 |
| வெண்டைக்காய் | " | 0 - 45 |
| பொன்னாங்காணி | " | 0 - 22 |
| வல்லாரை | " | 0 - 90 |
| பூசணிக்காய் | " | 0 - 14 |
| சுத்தமானநெய்போத்தல் | | 6 - 50 |
| நாட்டு பச்சை அரிசி (தலைவெட்டியது)கொத்து | | 0- 65 |
| புழுங்கல் அரிசி (தலைவெட்டியது)கொத்து | | 0- 75 |
| புளி | " | 0 - 85 |
| தேங்காய் எண்ணெய் | போத்தல் | 0 - 80 |
| எள் எண்ணெய் | " | 2 - 50 |
| வெள்ளைப்பூடு, (மார்க்கெட்நிலை) | ரூ. | 1 - 47 |

### கூட்டுறவு மொத்த விற்பனவு இலாகா

| | |
|---|---|
| உருளைக்கிழங்கு (இந்தியா) | 0 - 33 |
| உருளைக்கிழங்கு (இத்தாலி) | 0 - 27 |
| மிளகாய் (1-ம் நம்பர்) | 1 - 24 |
| ஸயாம் மிளகாய் | 1 - 03 |
| சின்னச் சீரகம் | 0 - 98 |
| மஞ்சள் | 0 - 57 |
| ஜப்பான் மல்லி | 0 - 95 |
| உளுந்து | 0 - 32 |
| பாசிப்பயறு | 0 - 36 |
| துவரம்பருப்பு | 0 - 30 |
| கடலைப்பருப்பு | 0 - 48 |
| சிந்தாமணிக் கடலை | 0 - 43 |
| பம்பாய் வெங்காயம் | 0 - 20 |
| வெள்ளைப்பூடு (பம்பாய்) ருத்தல் | 0 - 35 |

முருங்கைக்காய் 1க்கு 0 - 40 சதம். மிளகு 1 ருத்தல் ரூ. 3 - 22. (கட்டுப்பாட்டுவிலை இல்லை)


இரண்டாவது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

நவா (கும்பனித்தெரு) மொடர்ன் (பதுளை)

★ அன்பும் பண்பும் அமைந்த அருங்குணவதி நீ. உன் வரவால் என் வாழ்வு உயர்ந்தது. உன் மனம் பரிசுத்தமானது. உன் செய்கைகள் யாவுமே பரிசுத்தமானது. என் வாழ்வு உள்ள மட்டும் நீ என் நெஞ்சிலே நிறைந்த நித்திய பாக்யவதி.

★ அவ்வளவு என்னைப் புகழவேண்டாம் அத்தான். எனக்கு அன்னையும், அப்பனும் ஆண்டவனும் நீங்களே. பொன், பொருள் ஒன்றும் நான் உங்களுக்கு கொண்டுவரவில்லை. ஆனால் தூய்மையிலேயே தொடுக்கப்பட்ட என் மனத்தையும், உயிர் சேர்ந்த உடலையும் உங்கள் சேவைக்காக அர்ப்பணித்து வாழ வந்திருக்கிறேன். நீங்களே எனக்கு நிலையான துணை.

இசையாறும் இணைக்கப்பட்ட தீந்தமிழ்த் திரைவிருந்து



பாலாஜி ★ பண்டரிபாய்
ராஜகோபால் ★ மைனாவதி
ஏ. கருணாநிதி ★ எம். சரோஜா

நடித்த **எங்கள் குலதேவி**

டைரக்ஷன்: ஏ. சுப்பராவ் — சங்கீதம்: கே. வி. மகாதேவன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 5-30 மணிக்கு மட்டும்
சனி, ஞாயிறு காலை 10 மணி பி. ப. 1-30 மாலை 5-30 மணிக்கும்

ஆனந்தன் -- ஹேமலதா நடித்த

**விஜயபுரி வீரன்**

மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரி காலை 10-30, மாலை 5-30

**பெடறல் ஒப்பரேற்றர் 99**

[சீரியல் படம்]

தினசரி மாலை 2 மணிக்கும் மாலை 3-45 மணிக்கும்

கிறிகொறி பெக் நடித்த

**போக் சொப் ஹில்**

PORK CHOP HILL

(ENGLISH)


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனததாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஜூன் மாதம் 22-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.